# VETRII IAS STUDY CIRCLE

## TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## பிப்ரவரி - 2020

ISO 9001 : 2015

**An ISO 9001 : 2015 Institution | Providing Excellence Since 2011**


**Head Office**

Old No.52, New No.1, 9th Street, F Block, 1st Avenue Main Road,

(Near Istha siddhi Vinayakar Temple), Anna Nagar East – 600102.

**Phone: 044-2626 5326 | 98844 72636 | 98844 21666 | 98844 32666**

**Branches**

**SALEM**

No.189/1, Meyanoor Road, Near ARRS Multiplex, (Near Salem New bus Stand), Opp. Venkateshwara Complex, Salem - 636004.

**0427-2330307 | 95001 22022**

**KOVAI**

No.347, D.S.Complex (3rd floor), Nehru Street,Near Gandhipuram Central Bus Stand, Ramnagar, Kovai - 9

**75021 65390**

**Educarreerr Location**

**Vivekanandha Educational Institutions for Women,**

Elayampalayam, Tiruchengode - TK Namakkal District - 637 205.

**04288 - 234670 | 91 94437 34670**

**Patrician College of Arts and Science,**

3, Canal Bank Rd, Gandhi Nagar, Opposite to Kotturpuram Railway Station, Adyar, Chennai - 600020.


**044 - 24401362 | 044 - 24426913**

**Sree Saraswathi Thyagaraja College**

Palani Road, Thippampatti, Pollachi - 642 107

**73737 66550 | 94432 66008 | 90951 66009**

# இயக்குநர் வாழ்த்து மடல்



எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

பொருள் :

ஒன்றை பற்றி நினைத்தவர் நினைத்தபடியே செயல்புரிவதில்
உறுதியடைந்தவராக இருந்தால் நினைத்தவாறு வெற்றியே பெறலாம்.

**என் அன்பிற்கினிய மாணவர்களுக்கு**

மேற்கண்ட வள்ளுவரின் வாய்மொழியினை மெய்பிக்க விடா முயற்சியுடன், கடினமாக உழைத்து நேர்மையான வழியில் மாணவர்கள் தங்கள் வெற்றியினை அடைய **வெற்றி ஆட்சிபணிகள் பயிற்சி நிறுவனம்** சரியான வழிகாட்டுதலுடன், தரமான பயிற்சியினை அளித்து ஒவ்வொரு மாணவரின் மீது தனிப்பட்ட கவனம் செலுத்தி அவர்களின் குறிக்கோள்களை நிறைவு செய்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறது.

நம் பயிற்சி மையத்தில் மாணவர்களுக்கு அனைத்து பாடத்திலும் அடிப்படை அறிவை தெளிவுபடுத்தும் வகையில் வகுப்புகள் நடத்தப்பட்டு அதனை விளக்கும் வகையில் நம்முடைய அனைத்து கையேடுகளும் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நூலினை படித்து பயன்பெற மீண்டும் ஒருமுறை என்னுடைய வாழ்த்துகளை உங்களுக்கு உரித்தாக்கி கொள்கிறேன்.

**மு. சண்முகம்**
இயக்குனர்
வெற்றி ஐ.ஏ.எஸ். பயிற்சி நிறுவனம்

---

*Published by*

**VETRII IAS STUDY CIRCLE**
F Block New No. 1, 9th Street, 1st Avenue main Road, Chinthamani, Anna Nagar (E), Chennai – 102.
Phone: 044 – 26265326 / 9600124042 / 9840097666
www.vetriias.com
E-Mail: vetriiias@gmail.com / vetriiias2011@gmail.com / vetriiias2018@gmail.com
Feedback: vetriiiasmaterials@gmail.com

© All rights reserved with the publisher. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without the written permission of the publisher, will be responsible for the loss and may be punished for compensation under copyright act.

# பொருளடக்கம்


1 - 16 **வரலாறு**




▪முக்கிய தினங்கள் ▪உலக அமைப்புகள் – உடன்படிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்கள் ▪பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதம் ▪சிறந்த நபர்கள் ▪விளையாட்டு ▪புத்தகங்கள் மற்றும் எழுத்தாளர்கள் ▪விருதுகள் மற்றும் கௌரவங்கள் ▪கலாச்சாரம் ▪சமீபத்திய வரலாற்று நகழ்வு ▪இந்தியா மற்றும் அண்டை நாடுகள் ▪நியமனங்கள்

17- 19 **அரசியல் அறிவியல்**




▪இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை ▪சமீபத்திய நீதிமன்ற தீர்ப்புகள் ▪பொதுத் தேர்தலில் நடக்கும் பிரச்சனைகள் ▪அரசியல் கட்சிகள் மற்றும் இந்திய அரசியல் அமைப்புகள் ▪மத்திய அரசாங்கம் – பொதுநலம் சார்ந்த அரசுத் திட்டங்கள், அவற்றின் பயன்பாடுகள்

20- 21 **புவியியல்**




▪சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய கொள்கை

22 - 27 **பொருளாதாரம்**




▪புதிய பொருளாதாரக் கொள்கை மற்றும் அரசுத்துறை


28 - 30 அறிவியல்

- அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள்
- ஊடகம் மற்றும் தொலைத்தொடர்பு

31 - 39 தினசரி தேசிய நிகழ்வு

40 சர்வதேச நிகழ்வு

42 தமிழ்நாடு










# 1. வரலாறு






## 1.1 முக்கிய தினங்கள்

| | | |
|---|---|---|
| ***பிப்ரவரி 2*** | உலக ஈர நிலஙகள் தினம் | மையக்கருத்து : *'Wetlands and Biodiversity.'* |
| ***பிப்ரவரி 4*** | உலக புற்றுநோய் விழிப்புணர்வு தினம் | ▪ புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்துவதற்காக 2000-ம் ஆண்டு உலக சுகாதார நிறுவனம் பிப்ரவரி 4-ம் தேதியை உலக புற்றுநோய் விழிப்புணர்வு தினமாக அறிவித்தது. |
| ***பிப்ரவரி 6*** | பெண்களுக்கு எதிரான வன்முறையின் சர்வதேச பூஜ்ஜிய சகிப்பு தன்மை தினம் | ▪ மையக்கருத்து : *Unleashing Youth power : One decade of accelerating actions for Zero female genital mutilation* |
| | நிதி இலக்கிய வாரம் 2020 | ▪ இந்தியா ரிசர்வ் வங்கி "நிதி இலக்கிய வாரம் 2020" பிப்ரவரி 10 முதல் 14 வரை கடைப்பிடிக்க உள்ளது. தள்ளுபடி, கடன்கள், சரியான நேரத்தில் கடன்களை திருப்பி செலுத்துதல் போன்றவற்றை பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துதல். இதன் மையக்கருத்து *"Micro, Small and Medium Enterprises"* என்பதாகும். |
| ***பிப்ரவரி 10*** | உலக பருப்புகள் தினம் | |
| ***பிப்ரவரி 10*** | தேசிய குடல் புழு நீக்க தினம் | |
| ***பிப்ரவரி 11*** | அறிவியலில் பெண்கள் மற்றும் குழந்தைகள் பங்கேற்பதற்கான சர்வதேச தினம் | ▪ கருப்பொருள் : *"Investment in Women and Girls in Science for Inclusive Green Growth".* |
| ***பிப்ரவரி 11*** | உலக யுனானி தினம் | ▪ சிறந்த யுனானியும் சமூக சீர்த்திருத்தவாதியுமான "ஹக்கீம் அஸ்மல் கானின்" பிறந்தநாளை குறிக்கும் விதமாக இந்த தினம் கொண்டாடப்படுகிறது. |
| ***பிப்ரவரி 12*** | தேசிய உற்பத்தி தினம் | |
| ***பிப்ரவரி 12*** | உலக வானொலி தினம் | ▪ மையக்கருத்து - *"Radio and Diversity".* |
| ***பிப்ரவரி 13*** | தேசிய பெண்கள் தினம் | |

# 1.2 பாதுகாப்பு, தேசியப் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதம்

### ராணுவ தளவாட கண்காட்சி 2020

- உத்தரப்பிரதேச மாநிலம், லக்னோவில் (பிப்ரவரி 5) ராணுவத் தளவாட கண்காட்சி தொடங்கியது. இக்கண்காட்சியில் சென்னை ஐஐடி நிறுவனம் சார்பில் ராணுவப் பாதுகாப்பு தொடர்பான தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சிகளை காட்சிப்படுத்தபட்டன.
- குறிப்பாக அணு மற்றும் உயிரி ஆயுதங்கள் கண்காணிப்பு தொழில்நுட்பம், ஆயுதங்கள் மற்றும் ஏவுகணைகள்ஏவுதல் மற்றும் கட்டுப்படுத்தலில் நவீன தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்பங்களை சென்னை ஐஐடி நிறுவனம் உருவாக்கியுள்ளது.
- இவை அனைத்தும் லக்னோவில் பிப்ரவரி 5 முதல் 9-ஆம் தேதி வரை நடைபெற உள்ள ராணுவத் தளவாட கண்காட்சியில் பார்வைக்கு வைக்கப்பட உள்ளன.

### கிழக்கு ஆசியா மாநாடு

- வெளியுறவு அமைச்சகம், ஆஸ்திரேலியா, இந்தோனேஷியா அரசாங்கங்களுடன் இணைந்து கிழக்கு ஆசியா நாடுகளுக்கு கடல்சார் பாதுகாப்பு கூட்டமைப்பு சென்னையில் தொடங்கியது. இதில் கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பு பற்றி கிழக்கு ஆசிய மாநாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பு, பிரச்சனைகள், மேம்பாடுகள் பற்றி விவாதிக்கப்படுகிறது.

### மூன்றாவது நீர்முழ்கி கப்பல் - கரன்ஜி

- நாட்டின் மூன்றாவது நீர்மூழ்கி கப்பல் கரன்ஜியை (Karanji) இந்திய கப்பற்படை வரும் டிசம்பர் மாதம் பயன்பாட்டுக்கு வர உள்ளதாக தெரிவித்துள்ளது. மேலும் ஆறு நீர் மூழ்கி கப்பல்கள் வரும் 2022க்குள் பயன்பாட்டுக்கு கொண்டு வர உள்ளதாக தெரிவித்துள்ளது.
- கடந்த 2018ஆம் ஆண்டு கரஞ்சி நீர்மூழ்கி கப்பல் சோதனைக்காக வெளிக் கொண்டு வரப்பட்டது. முதல் நீர் மூழ்கிக் கப்பல் கல்வாரி கடந்த 2008 ஆம் ஆண்டு பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது. இரண்டாவது நீர்மூழ்கி கப்பல், காந்தேரி கடந்த ஆண்டு பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது.

### 155மி.மீ கொண்ட பீரங்கி துப்பாக்கிகள் ஒப்படைப்பு

- ஆர்டன்ஸ் தொழிற்சாலை வாரியம் இந்திய இராணுவத்திடம் மேம்படுத்தப்பட்ட 155மி.மீ கொண்ட ஷரங் (Sharang) பீரங்கி துப்பாக்கிகளை ஒப்படைத்தது.
- இதற்காக ரூ.200 கோடி ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இதன் வரம்பு 27 கி.மீட்டரிலிருந்து 36 கி.மீட்டராக உயர்த்தப்பட்டுள்ளது.
- M-46 பீரங்கியை 130 மி.மீ. இருந்து 155 மி.மீட்டராக மேம்படுத்தி தற்போது உருவாக்கப்பட்டுள்ளது.

### ராணுவ தளவாட ஏற்றுமதி அதிகரிக்கப்படும்

- அடுத்த 5 ஆண்டுகளில் இந்தியாவில் இருந்து ரூ.35,000 கோடி மதிப்புக்கு ராணுவ தளவாடங்கள் ஏற்றுமதி செய்யப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.
- உத்தரப் பிரதேச மாநிலம் லக்னௌவில் 11-ஆவது ராணுவ தளவாடங்கள் மற்றும் பாதுகாப்புத் துறை கண்காட்சி தொடங்கியது.
- இதில் 38 நாடுகளின் பாதுகாப்புத் துறை அமைச்சர்கள், 172 வெளிநாட்டு ராணுவ உயரதிகாரிகள் கலந்து கொண்டனர். 856 இந்திய நிறுவனங்களின் பங்கேற்புடன், 5 நாட்கள் நடைபெறும் இந்த கண்காட்சியைத் பிரதமர் தொடங்கி வைத்தார்.

### பச்சை விளக்கு கொண்ட ஹெலிகாப்டர்

- *Light Utility Helicopter* ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிகல் லிமிட்டால் தயாரிக்கப்பட்டது. இது தற்போது லக்னோவில் நடைபெற்ற பாதுகாப்பு கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப்பட்டது.
- இது சீட்டா *(Cheetah)* மற்றும் சேடக் *(Chetak)* ஹெலிகாப்டர்களுக்கு பதிலாக உருவாக்கப்பட்டது. இக்கண்காட்சியில் ரஷ்யாவுடன் தொழில்நுட்பம், உற்பத்தி துறைகளில் இந்தியா ஒப்பந்தம் மேற்கொண்டது. இந்த ஹெலிகாப்டர் 3டன் எடை கொண்டது.

### குண்டு துளைக்காத ஹெல்மெட்

- ஏ.கே. 47 ரக துப்பாக்கி குண்டுகளால் துளைக்க முடியாத ஹெல்மெட்டினை இராணுவ மேஜர் அனுப் மிஸ்ரா தயாரித்திருக்கிறார். இது, உலக அளவில் முதல் குண்டு துளைக்காத ஹெல்மெட் என்ற பெருமையை பெற்றுள்ளது.
- இதற்கு முன்பு 'ஸ்னைப்பர்' ரக துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்க முடியாத கவச உடையை கடந்த ஆண்டு அனூப் மிஸ்ரா தயாரித்தார்.

### உலகின் மிக மலிவாக துப்பாக்கி ஹாட் லோக்கேட்டர்

- மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள இந்திய இராணுவபொறியியல்கல்லூரிவிஞ்ஞானிகள் துப்பாக்கி ஹாட் லோக்கேட்டர்-ஐ உருவாக்கி உள்ளனர்.
- இந்த லோக்கேட்டர் உலகின் மிக மலிவான துப்பாக்கி ஆகும். இதை லக்னோவில் நடைபெற்ற பாதுகாப்பு கண்காட்சியில் இராணுவ மேஜர் அனூப் மிஸ்ரா அறிமுகப்படுத்தினார்.
- ஏ.கே. 47 ரக துப்பாக்கி குண்டுகளால் துளைக்கமுடியாத ஹெல்மெட்டினை இராணுவ மேஜர் அனூப் மிஸ்ரா தயாரித்திருக்கிறார். இது, உலக அளவில் முதல் குண்டு துளைக்காத ஹெல்மேட் என்ற பெருமையை பெற்றுள்ளது.
- இதற்கு முன்பு "ஸ்னைப்பர்" ரக துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்க முடியாத கவச உடையை கடந்த ஆண்டு அனூப் மிஸ்ரா தயாரித்தார்.

### இந்தியா-இங்கிலாந்து இடையே கூட்டு ராணுவப்பயிற்சி

- இந்தியா, இங்கிலாந்து நாடுகளின் கூட்டு ராணுவப் பயிற்சி வரும் 13ம் தேதி முதல் 26ம் தேதி வரை நடக்கிறது.
- அஜேயா வாரியர் என்ற பெயரில் தொடங்க உள்ள இந்தப் பயிற்சி இங்கிலாந்தில் உள்ள சாலிஸ்பெரி சமவெளியில் நடக்க உள்ளது. இந்தப் பயிற்சியில் இரு நாடுகளைச் சேர்ந்த 120 வீரர்கள் பங்கேற்க உள்ளனர்.

### பெண் ராணுவ அதிகாரிகளுக்கு ஓய்வூதியம்

- இராணுவத்தில் பணியாற்றும் பெண் அதிகாரிகளுக்கு இனி ஓய்வூதியம் வழங்கப்பட உள்ளதாக இந்திய இராணுவம் தெரிவித்துள்ளது. இதற்கான வரம்புகள் நிர்ணயித்துள்ளது.
- பெண் இராணுவ அதிகாரிகள் 20 வருடம் மற்றும் இளைய இராணுவ அதிகாரிகள் 15 வருடம் பணியாற்றுபவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புதிய பாலிஸ்டிக் ஏவுகணை பிரணாஷ்

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு புதிய பாலிஸ்டிக் ஏவுகணை பிரணாஷ் *(Pranash)* உருவாக்கி உள்ளது. இது 200கி.மீ. வரை தாக்கும் திறன் கொண்டது. மேலும் மேம்படுத்தப்பட்ட பிரஹகார் *(Prahaar)* ஏவுகணை 150 கி.மீ வரை மட்டுமே தாக்கும் திறன் கொண்டது.
- பிரணாஷ் ஏவுகணை நிலப்பரப்பு முதல் நிலப்பரப்பு தாக்கும் திறன் கொண்டது. இந்த ஏவுகணை மேக்2 *(Mach 2)* என்ற வேகத்தில் பயணிக்க கூடியது ஆகும்.

**புதிய புல்லட் ப்ரூஃப் ஜாக்கெட்**

- பாபா அணு ஆராய்ச்சி மையம் பாபா கவாச் (Bhabha Kavach) என்ற புதிய புல்லட் ப்ரூஃப் ஜாக்கெட்டை உருவாக்கி உள்ளது. இந்த புல்லட் ப்ரூஃப் ஜாக்கெட்டை மத்திய தொழில்துறை பாதுகாப்பு பயன்பாட்டுக்கு உருவாக்கி உள்ளது.
- இந்த ஜாக்கெட் மற்ற ஜாக்கெட்டுகளுடன் ஒப்பிடும் போது 17 கி.கி. எடை கொண்டது. மத்திய தொழில்துறை பாதுகாப்பு படை பயன்படுத்த மத்திய உள்துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

**INS சிவாஜி : குடியரசு தலைவரின் வண்ண விருது**

- குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்த் INS சிவாஜி கப்பற்படை தளத்திற்கு வண்ண விருது (Colour award) வழங்கியுள்ளார். 2019ம் ஆண்டில் இந்த விருது இந்திய கப்பல்படைக்கு வழங்கப்பட்டது.
- INS சிவாஜி கடற்படை தளம் புனேவிற்கு அருகில் லோனாவாலாவில் 1945ம் ஆண்டில் துவங்கப்பட்டது.
- Motto: Karmasu Kaushalam (Skill at Work) பணிகளில் திறன் வெளியீடு என்ற குறிக்கோளை அடிப்படையாக கொண்டு துவங்கப்பட்டது.

**கடத்தலுக்கு எதிரான பயிற்சி**

- கடத்தலுக்கு எதிரான பயிற்சியை விசாகப்பட்டினத்தில் உள்ள இந்திய கடற்படையின் கடற்படை விமான நிலையத்தில் நடைபெற்றது. இதில் இந்திய கடற்படைக்கு சொந்தமான ஐ.என்.எஸ் தேகா இப்பயிற்சியில் பயன்படுத்தப்பட்டது.

# 1.3 உலக அமைப்புகள் - உடன்படிக்கைகள் மற்றும் மாநாடுகள்

**இந்தியாவில் ஜி20 மாநாடு**

- இந்தியாவில் வரும் 2022-ஆம் ஆண்டு ஜி 20 மாநாட்டை நடத்த ரூ. 100 கோடியை மத்திய அரசு ஒதுக்கியுள்ளது.
- இந்தியா தனது 75-ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடும் 2022-ஆம் ஆண்டு ஜி20 மாநாடு இந்தியாவில் நடைபெற உள்ளது.
- ஜி20 நாடுகள் அமைப்பு உலகின் முக்கியப் பொருளாதார சக்திகளாகக் கருதப்படும் அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, சீனா, சவூதி அரேபியா, தென்கொரியா, அர்ஜெண்டினா, ஆஸ்திரேலியா, பிரேசில், கனடா, ஐரோப்பிய யூனியன், பிரான்ஸ், ஜெர்மனி, இந்தோனேஷியா, இத்தாலி, ஜப்பான், மெக்ஸிகோ, தென்னாப்பிரிக்கா, துருக்கி, இந்தியா ஆகியவை உள்ளன.

**10 இந்தியர்களில் ஒருவருக்கு புற்றுநோய் அபாயம்**

- சர்வதேச புற்றுநோய் தடுப்பு தினம் (பிப்ரவரி 4) உலகம் முழுவதும் அனுசரிக்கப்பட்டது. இதையொட்டி, ஐ.நா.வின் உலக சுகாதார நிறுவனம் புற்றுநோய் தொடர்பாக வருடாந்திர ஆய்வு அறிக்கையை வெளியிட்டுள்ளது. இந்தியாவை பொறுத்தவரை கடந்த 5 ஆண்டுகளில் 22.6 லட்சம் பேர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மேலும் 2040ஆம் ஆண்டுக்குள் 81% புற்றுநோயால் பாதிக்கப்படுவார்கள் என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

### ராஜஸ்தான் மாநிலத்தின் பிங் நகரம் உலகின் பாரம்பரிய பட்டியலில் இணைப்பு

- *ராஜஸ்தான் மாநிலத்தின் ஜெய்ப்பூர் (பிங்க் நகரம்) உலக பாரம்பரிய அமைப்பு பட்டியலில் இணைந்துள்ளது. இதற்கான சான்றிதழ் அம்மாநில முதலமைச்சர் அவர்களிடம் வழங்கப்பட்டது.*
- *மேலும் கடந்த ஆண்டு உலக பாரம்பரிய அமைப்பு சுவர் நகரமான (Wall City of Jaipur) ஜெய்ப்பூரைபட்டியலில்இணைத்தது. இதுGrid Plan அடிப்படையிலான கட்டிடக்கலைக்காக பட்டியலில் இணைக்கப்பட்டது.*

### சர்வதேச அறிவுசார் சொத்துரிமை பட்டியல்

- *அமெரிக்காவின் உலகளாவிய புதுமைகள் கண்டுபிடிப்பு கொள்கை மைய நிறுவனம் 2020ஆம் ஆண்டின் சர்வதேச அறிவுசார் சொத்துரிமை பட்டியல் வெளியிட்டுள்ளது. இந்தியா தரநிலையில் 40வது இடத்தில் உள்ளது. பொருளாதாரத்தில் வேகமாக வளர்ந்து வரும் நாடுகள், ஆராய்ச்சி துறைகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த பட்டியல் வெளியிடப்பட்டது.*
- *இந்தியா கடந்த ஆண்டை ஒப்பிடுகையில் நான்கு (36வது) இடம் பின்தங்கி 40வது இடத்தில் உள்ளது.*

| தரநிலை | நாடுகள் |
|---|---|
| 1 | அமெரிக்கா |
| 2 | லண்டன் |
| 3 | ஸ்வீடன் |
| 4 | பிரான்ஸ் |
| 5 | ஜெர்மன் |

### உலகளாவிய கண்டுபிடிப்புகள் கொள்கை மையம்

- *தொடக்கம் – 2007*
- *தலைமையிடம் – அமெரிக்கா*
- *இந்த நிறுவனம் வணிகம் தொடர்பான புதுமையான கண்டுபிடிப்புகள் பற்றி ஊக்குவிக்கும்.*

# 1.4 சிறந்த நபர்கள்

### 51வது அண்ணா நினைவு தினம்

- *காஞ்சீவரம் நடராசன் அண்ணாதுரையின் (C.N.Annadurai, 15 செப்டம்பர், 1999 - 3 பிப்ரவரி, 1969) நினைவு நாள் முன்னிட்டு தமிழகத்தில் பல்வேறு இடங்களில் மரியாதை செலுத்தப்பட்டது.*

### விண்வெளி ஆய்வில் சாதனை படைத்த நாசா வீராங்கனை

- *விண்வெளியில் நீண்ட காலம் தங்கியிருந்த ஆய்வு மேற்கொண்ட பெண் என்ற சாதனையுடன் அமெரிக்க விண்வெளி வீராங்கனை கிறிஸ்டினா கோச் பூமி திரும்பினார்.*
- *நாசா விண்வெளி ஆய்வு மையத்தைச் சேர்ந்த கிறிஷ்டினா கோச், ரஷியாவின் சோயுஸ் விண்கலம் மூலம் கடந்த ஆண்டு மார்ச் மாதம் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்துக்கு அனுப்பப்பட்டார். அங்கு 328 நாள்கள் தங்கி ஆய்வுகள் மேற்கொண்ட அவர் பிப்.6 தேதி கஜகஸ்தானில் தரையிறங்கினார்.*
- *இதன் மூலம் விண்வெளியில் மிக அதிக நாள்கள் தங்கியிருந்த பெண் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார்.*

### ராஜூ பரதன் காலமானார்



- *கிரிக்கெட் பத்திரிக்கையாளரான ராஜு பரதன் காலமானார். பரதன் வார இதழ்களுடன் தொடர்புடையவர். குஷ்வந்த் சிங், எம்.வி. காமத், பிரிதிஷ் நந்தி மற்றும் அனில் தர்கர் போன்றவர்களுடன் பணியாற்றியவர்.*


**மலையேற்றம் : இந்திய பள்ளி மாணவி உலக சாதனை**

- *தென் அமெரிக்க கண்டத்தின் மிக உயர்ந்த மலைச் சிகரமான அகோன்காகுவாவில் ஏறி, இந்தியாவைச் சேர்ந்த பள்ளி மாணவி காம்யா கார்த்திகேயன் சாதனை படைத்துள்ளார்.*
- *இதன்மூலம், அந்த மலைச் சிகரத்தில் ஏறிய உலகின் மிகக் குறைந்த வயதுச் சிறுமி என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.*
- *ஆசிய கண்டத்துக்கு வெளியே மிக உயரமானதாக இருக்கும் அந்த மலைச் சிகரம் 6,962 மீட்டர் உயரம் கொண்டதாகும்.*

**அப்துல் கலாம் வாழ்க்கை வரலாறு திரைப்படம்**

- *மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் வாழ்க்கை வரலாறு 'ஏ.பி. ஜெ. அப்துல் கலாம்: தி மிஸைல் மேன்' என்ற பெயரில் திரைப்படமாக தயாரிக்கப்படுகிறது.*
- *இந்த படத்தின்அறிமுக போஸ்டரை, தில்லியில் மத்திய செய்தி மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் வெளியிட்டார்.*

**J.R.D. டாடா டிஜிட்டல் விமான உரிமை பெற்ற முதல் இந்தியர்**



- *பிப்ரவரி 10, 1929 அன்று விமானியான ஜெகந்கீர் R.D. டாடா அவர்களுக்கு விமானம் இயக்க உரிமை வழங்கப்பட்டது. இதன் மூலம் விமானம் இயக்கும் உரிமை பெற்ற முதல் இந்தியர் இவர் ஆவார்.*
- *கடந்த 1904, ஜூலை 289 அன்று பிறந்தார். ஜெகந்தர் 1932 ஆம் ஆண்டு பாரீஸில் இந்தியாவின் முதல் விமான சேவையை (Airmail Service) தொடங்கினார். முதன் முறையாக உரிமை பெற்ற பின் மும்பையில் இருந்து கராச்சி வரை விமானம் இயக்கினார்.*

**நிதி நிறுவனத்துக்கு அருண்ஜெட்லியின் பெயர்**

- *பாரிதா பாத்தில் உள்ள தேசிய நிதி மேலாண்மை நிறுவனத்தை அருண் ஜெட்லி தேசிய நிதி மேலாண்மை நிறுவனம் (Arun Jaitley National Institute of Financial Management) என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.*
- *மத்திய பொது பணி தேர்வாணையத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு நிதி மற்றும் கணக்கு சேவைகள் பயிற்சி அளிக்க அமைக்கப்பட்டது.*
- *இது செலவினத்துறையின் கீழ் (Department of Expenditure) 1993 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.*

**நோபல் பெற்ற சுற்றுச்சூழலியலாளர் ஆர்.கே. பச்செளரி காலமானார்**

- *அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவரும், ஆற்றல் மற்றும் வளங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் முன்னாள் தலைவருமான ஆர். கே.பச்செளரி காலமானார்.*
- *கடந்த 2007-இல் பருவநிலை மாற்ற விவகாரத்தில் சர்வேதச அரசுகளுக்கான ஐ.நா. குழுவின் தலைவராக பதவி வகித்துவந்தபோது பச்செளரிக்கு அமைதிக்கான நோபல் பரிசு கிடைத்தது.*
- *2001-ஆம் ஆண்டில் பத்ம பூஷண் விருதும், 2008-இல் பத்ம விபூஷண் விருதும் அவர் பெற்றிருந்தார்.*

**புகழ்பெற்ற இரண்டு நிறுவனங்களுக்கு சுஷ்மா சுவராஜ் பெயர் சூட்டப்பட்டது**

- *முன்னாள் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் அவர்களின் பெயரை இரண்டு புகழ்பெற்ற நிறுவனமான பிரவாசி பாரதிய கேந்திரா மற்றும் வெளியுறவு சேவை நிறுவனம் ஆகியவற்றுக்கு மத்திய அரசு சூட்டியுள்ளது.*

- இந்த பெயர் மாற்றத்தை அவரின் 68வது பிறந்த நாளை முன்னிட்டு (பிப்ரவரி 14, 2020) மத்திய அரசு அறிவித்துள்ளது.
- பாரம்பரிய மையமான பிரவாசி பாரதிய கேந்திராவுக்கு சுஷ்மா சுவராஜ் பவன் என்றும் மற்றும் வெளியுறவு சேவை நிறுவனத்தை சுஷ்மா சுவராஜ் வெளிநாட்டு சேவை நிறுவனம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
- சுஷ்மா சுவராஜ் ஹரியானா மாநிலத்தின் முதல் இளைய காபினெட் அமைச்சர் மற்றும் டெல்லியின் முதல் பெண் முதலமைச்சர் ஆவார்.
- இந்தியாவின் தேசிய அரசியல் கட்சியின் முதல் பெண் செய்தித் தொடர்பாளர் ஆவார்.

# 1.5 முக்கிய இடங்கள்

### டிஜிட்டல் பூம்புகார் திட்டம்




- தமிழ்நாட்டில் சோழ வம்ச துறைமுகமான பூம்புகாரை மீண்டும் உருவாக்க அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறை "டிஜிட்டல் பூம்புகார் "திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.
- அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறையின் இந்திய பாரம்பரியங்களை டிஜிட்டல் மயமாக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக (Indian Digital Heritage Project) பூம்புகார் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- இந்த திட்டத்தின் முதல் கட்டமாக "டிஜிட்டல் ஹம்பி" தற்போது தேசிய அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.
- இந்து பூம்புகார் துறைமுகம் சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன்னர் கடல் சீற்றத்தால் அழிந்தது. பூம்புகார் தற்போது நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ளது.

**பூம்புகார்**

- சோழர்களின் முக்கிய துறைமுகமாகும்.
- வேறு பெயர்கள்: காவேரிப்பட்டினம், புகார், பூம்புகார்

### சேலத்தில் கிரிக்கெட் மைதானம்

- சேலம் மாவட்டம் வாழப்பாடியை அடுத்த காட்டுவேப்பிலைப்பட்டியில் சேலம் கிரிக்கெட் பவுண்டேஷன் சார்பில் அமைக்கப்பட்ட கிரிக்கெட் மைதானத்தை முதல்வர் பழனிசாமி திறந்து வைத்தார்.
- கிராமங்களில் உள்ள இளைஞர்களின் ஆரோக்கியம் மற்றும் மன வளத்தை மேம்படுத்த 12, 524 ஊராட்சிகள், 528 பேரூராட்சிகளில் ரூ.76.23 கோடியில் "அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டம்" தொடங்கப்பட்டுள்ளது.

# 1.6 விளையாட்டு

### வெளிநாட்டு கிளப்பில் விளையாட போகும் இந்திய வீராங்கனை



- இந்திய கால்பந்து வீராங்கனை பாலா தேவி, வெளிநாட்டு கால்பந்து கிளப்பிற்காக விளையாட உள்ளார். ஸ்காட்லாந்த் நாட்டின் ரேஞ்சர்ஸ் அணிக்காக விளையாட மணிப்பூரை சேர்ந்த பாலா தேவி தேர்வு செய்யப்பட்டு உள்ளார். இதன்மூலம் வெளிநாட்டுப் கிளப் அணிக்காக விளையாடும் முதல் இந்திய வீராங்கனை என்ற பெருமையை பாலா தேவி பெற்றுள்ளார்.

### உலகக் கோப்பை படகு போட்டி

- உலக கோப்பை படகு போட்டியில் வெண்கலப் பதக்கத்தை வென்று முதல் பதக்கத்தை கைப்பற்றிய இந்திய வீராங்கனை என்ற சாதனையைசென்னையைச் சேர்ந்த நேத்ரா குமணன் படைத்துள்ளார்.
- அமெரிக்காவின் மியாமியில் ஜனவரி 25-இல் நடைபெற்ற ஹெம்பல் உலகக் கோப்பை படகு போட்டியில் லேஸர் ரேடியல் கிளாஸ் பிரிவில் நேத்ரா வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றினார்.

### 2020ஆம் ஆண்டு கோவா தேசிய விளையாட்டு போட்டிக்கான சின்னம் வெளியீடு

- கோவா மாநிலம், பனாஜியில் நடைபெற உள்ள 2020ஆம் ஆண்டு தேசிய விளையாட்டு போட்டிகளுக்கான சின்னம் வெளியிடப் பட்டுள்ளது. இதன் பெயர் 'ரூபிகுலா' (Rubigula) என்று பெயரிடப்பட்டுள்ளது. தேசிய விளையாட்டின் 36-வது பதிப்பு அக்டோபர் 20 முதல் நவம்பர் 4 வரை நடைபெற உள்ளது.

### மகளிருக்கான 10மீ ஏர் ரைபிள் போட்டி

- ஒலிம்பிக் தகுதி போட்டிகளில் வென்ற அயோனிகா பவுல் (Ayonika Paul) மகளிருக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில் பட்டம் வென்றார்.
- இந்த வெற்றியின் மூலம் ஜப்பான் நகரில் நடைபெற உள்ள டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் அயோனிகா பவுல் விளையாட தகுதி பெற்றார்.
- இதற்கு முன்பு அபுர்வி சந்தேலா மற்றும் அஞ்சும் மௌட்கில் ஆகியோர் விளையாட தகுதி பெற்றுள்ளனர்.

### மாத்ரூபூமி புத்தக ஆண்டு விருது 2020

- இந்தி எழுத்தாளரும், சாகித்ய விருது பெற்றவருமான வினோத் குமார் சுக்லா அவர்களுக்கு மாத்ரூபூமி சிறந்த புத்தக விருது 2020 வழங்கப்பட்டது. 'Blue Is Like Blue' என்ற புத்தகத்தை ஆங்கில மொழிக்கு மொழிபெயர்த்ததற்காக இந்த விருது வழங்கப்பட்டது.
- "Deewar Mein Ek Khidki Rehti Thi" என்ற நாவலுக்காக 1999ஆம் ஆண்டு சாகித்திய விருது பெற்றார்.

### புதிய சாதனையுடன் தங்கம் வென்றார் மீராபாய் சானு



- தேசிய பளுதூக்குதல் சாம்பியன்ஷிப் போட்டியில் 49 கிலோ எடைப்பிரிவில் புதிய சாதனையுடன் தங்கம் வென்றார் முன்னாள் உலக சாம்பியன் மீராபாய் சானு.
- கொல்கத்தாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் மகளிர் பிரிவில் மணிப்பூரைச் சேர்ந்த மீராபாய் சானு ஸ்நாட்ச் பிரிவில் 88 கிலோவும் ஜெர்க்கில் 115 கிலோ என மொத்தம் 203 கிலோவை தூக்கி தனது முந்தைய சாதனையை தகர்த்தார்.

- கடந்த செப்டம்பரில் தாய்லாந்தில் நடந்த உலகப் போட்டியில் 201 கிலோ எடையை தூக்கி சாதனை படைத்திருந்தார்.

### தங்க மங்கை சாம்பியன் ஷிப்பில் இந்தியாவுக்கு 14 பத்தகங்கள்

- சுவீடன் நாட்டில் உள்ள போரஸ் நகரில் தங்க மங்கை சாம்பியன்ஷிப் நடைபெற்றது.
- 75 நாடுகளைச் சேர்ந்த அணிகள் கலந்து கொண்ட இந்தத் தொடரில் இந்திய ஜூனியர் மகளிர் அணியினர் 5 தங்கம், 3 வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கம் வென்றனர்.
- ஜூனியருக்கான 50 கிலோ எடைப் பிரிவில் தங்கம் வென்ற ஹரியாணாவின் பிராச்சி தங்கர், தொடரின் சிறந்த வீராங்கனை விருதை பெற்றார்.

### நாடு முழுவதும் 7 இடங்களில் உயர் செயல்திறன் மையங்கள்

- ஜூனியர், சப்-ஜூனியர் ஹாக்கி வீரர், வீராங்கனைகளுக்குப் பயிற்சியளிக்க வசதியாக நாடு முழுவதும் 7 நகரங்களில் உயர் செயல்திறன் மையங்களை இந்திய விளையாட்டு ஆணையம் (சாய்) மற்றும் ஹாக்கி இந்தியா அமைப்புகள் இணைந்து ஏற்படுத்தவுள்ளன.
- 2024, 2028-ம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்கு இந்திய வீரர், வீராங்கனைகளைத் தயார்படுத்துவதற்காக இந்த உயர் செயல்திறன் மையங்கள் அமைக்கப்படுகின்றன.
- டெல்லி தயான்சந்த் தேசிய ஸ்டேடியத்தில் செயல்படும் தேசிய ஹாக்கி அகாடமி, ஒடிசாவிலுள்ள சாய் சுந்தர்கர் மையம், போபாலில் உள்ள சாய் யுடிஎம்சிசி, பெங்களூருவில் உள்ள சாய் மையங்களில் இந்த உயர் செயல்திறன் ஹாக்கி மையங்கள் செயல்படத் தொடங்கும்.
- இந்த ஹாக்கி உயர் செயல்திறன் மையங்களில் சர்வதேச தரத்தில் அவர்களுக்கு பயிற்சியளிக்க ஏற்பாடுகள் செய்யப்படும்.
- இந்த மையங்களுக்கு மத்திய விளையாட்டுத் துறையின் கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் நிதி வழங்கப்படும்.

### மகளிர்க்கான தேசிய பளுதூக்குதல் சாம்பியன்ஷிப் போட்டி

- மேற்குவங்காளத்தில் நடைபெற்ற மகளிர்க்கான 35வது தேசிய பளு தூக்குதல் சாம்பியன் ஷிப் போட்டியில் சீனியர் பிரிவில் ராகி ஹல்டர் 64கி.கி எடை பிரிவில் தங்கம் வென்றார்.

### Ironman போட்டி



- ஔரங்கபாத்தை சேர்ந்த நிக்கெத் தலால் மூன்று போட்டிகளின் இரும்பு மனிதன் (Ironman triathlon) போட்டியில் கலந்து கொண்டு சாதனை படைத்த முதல் கண்பார்வையற்ற வீரர் ஆவார். 1.9 கி.மீ நீச்சல்போட்டி , 90 கி.மீ சைக்ளிங் மற்றும் 21.1 கி.மீ ஓட்டப்போட்டியில் கலந்து கொண்டு சாதனை படைத்தார்.

### டி20 போட்டியில் தொடர்ச்சியாக 5 அரைசதங்கள் அடித்து சாதனை படைத்த சோஃபி டேவின்

- நியூசிலாந்து பெண்கள் அணியின் கேப்டன் சோஃபி டேவின் டி20 கிரிக்கெட்டில் தொடர்ச்சியாக 5 அரைசதங்கள் குவித்த முதல் சர்வதேச கிரிக்கெட் வீரர் ஆனார். இவர் தென்னாப்பிரிக்காவுக்கு எதிராக அடித்த 105 ரன்களில் இந்த சாதனையை செய்தார்.
- டி20 கிரிக்கெட்டில் மூன்று புள்ளிவிவரங்களை எட்டிய இரண்டாவது நியூசிலாந்து மகளிர் கிரிக்கெட் வீரர் என்ற பெருமையை டெவின் பெற்றார்.

### தேசிய குளிர்கால விளையாட்டு

- தேசிய குளிர்கால விளையாட்டு மார்ச் 7, 2020 அன்று குல்மார்க் என்ற இடத்தில் தொடங்குகிறது. உலகப்புகழ் பெற்ற ஸ்கை இடமான குல்மார்க்கில் இந்த விளையாட்டுகள் 5 நாள் நடைபெற உள்ளன.
- கேலோ இந்தியாவின் கீழ் இந்த விளையாட்டு நடைபெற உள்ளது.

### ஹாக்கி : மும்பை கோப்பை

- 2020ம் ஆண்டிற்கான மும்பை தங்க கோப்பை ஹாக்கி போட்டிகளின் 54வது பதிப்பு மகாராஷ்டிராவின் மும்பை நகரத்தில் மகிந்த்ரா ஹாக்கி மைதானத்தில் நடைபெற்றது.
- இந்திய கப்பற்படை அணி தெற்கு மத்திய ரயில்வே அணியை தோற்கடித்து சாம்பியன் பட்டம் பெற்றது.

### சர்வதேச ஹாக்கி சம்மேளனத்தின் சிறந்த வீரர் விருது



- சர்வதேச ஹாக்கி சம்மேளனம் சார்பில் வழங்கப்படும் ஆண்டின் சிறந்த வீரருக்கான விருதை இந்திய ஆடவர் ஹாக்கி அணியின் கேப்டன் மன்பிரீத் சிங் பெற்றுள்ளார்.
- இந்த விருதை வெல்லும் முதல் இந்திய வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

### ஜுனியர் கிரிக்கெட் உலகக் கோப்பை

- ஜுனியர் உலகக் கோப்பை கிரக்கெட் போட்டி (19 வயதுக்குட்பட்டோர்) நடப்பு சாம்பியன் இந்தியாவை 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்று முதன்முறையாக பட்டத்தைக் கைப்பற்றி வாங்கதேசம் வரலாறு படைத்தது.

### தரநிலையில் நான்காவது இடத்தில்: ஸ்மிருதி மந்தானா




- சர்வதேச கிரிக்கெட் சங்கத்தின் சார்பில் தரவரிசை வெளியிடப்பட்டது. இதில் டி20 போட்டிகளுக்கான மகளிர் சர்வதேச தரவரிசையில் இந்திய மகளிர் கிரிக்கெட் அணியை சேர்ந்த ஸ்மிருதி மந்தானா நான்காவது இடத்தில் உள்ளார். ஹம்ரித்கௌர் ஒன்பதாவது இடத்தில் உள்ளார்.
- 

# 1.7 புத்தகங்கள் மற்றும் எழுத்தாளர்கள்

### காந்தி கொலை குறித்து "தி இந்து " வின் புத்தகம்

- மகாத்மா காந்தியின் 150வது பிறந்த நாளை முன்னிட்டு "தி இந்து"வின் சார்பில் சிறப்பு புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது.
- "மகாத்மா காந்தி படுகொலை விசாரணையும் தீர்ப்பும் 1948-49" என்ற புத்தகத்தை புகழ்பெற்ற வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன், வெளியிட்டார்.
- மகாத்மா காந்தி கொலையில் தொடங்கி, அது பற்றி விசாரணை நடத்திய கபூர் கமிஷன் விசாரணை அறிக்கை வரை நடந்த சம்பவங்களைத் தொகுத்து விளக்கப்பட்டுள்ளது.

### "Calcutta Nights"




- ராஜட் சௌதிரி என்பவர் *"Calcutta Nights"* என்ற புத்தகத்தை மொழி பெயர்த்து உள்ளார். இதன் அசல் புத்தகம் *Raater Kolkata* என்பதாகும்.
- இந்த புத்தகம் முதன்முறையாக பெங்காலி எழுத்தாளர் ஹேம்ந்தராகுமார் ராய் அவர்களால் 1923 ஆம் ஆண்டு எழுதி வெளியிடப்பட்டது .

### "Lord J: Lord of Anonymity" Auto biography

- உத்தரபிரதேசத்தின் வாரணாசியை சேர்ந்த பாடகர் லார்ட் ஜே அவர்களின் சுயசரிதையான *"Lord J: Lord of Anonymity Lord of Anonymity* என்ற புத்தகத்தை வெளியிட்டார்.

### 'A Child of Destiny'

- துணைக் குடியரசுத் தலைவரான வெங்கய்யா நாயுடு காந்தி தொழில்நுட்ப மற்றும் மேலாண்மை நிறுவனத்தை சேர்ந்த பேராசிரியர் கொனேரு ராமகிருஷ்ணராவ் அவர்களின் சுயசரிதையான*'A Child of Destiny'* என்ற புத்தகத்தை வெளியிட்டார்.

### ."The MIND MAP BOOK"

- தர்மேந்திர ராய் என்பவர் *The Thin Mind Map* என்ற புத்தகத்தை எழுதியுள்ளார். புதுமையான கண்டுபிடிப்புகள் *(Creativity)* பற்றி பேசும் முதல் புத்தகம் இதுவாகும்.

### Messages from Messengers

- இந்திய கலாச்சாரம் மற்றும் வாழ்க்கை முறை குறித்த படிநிலைகளை விவரிக்கும் பிரித்தி கேஷ்ரோப் எழுதியுள்ள *Messages from Messengers* என்ற புத்தகம் மகாராஷ்டிரா மும்பையில் வெளியிடப்பட்டது.

### A Commentary and Digest on The Air, Act 1981

- ஹரியானா முதலமைச்சர் மனோகர் லால் கட்டார், ஹரியானா மாநில ரியல் எஸ்டேட் ஆணைய தலைவர் டாக்டர் K.K.கந்தல்வால் *(Dr.K.K.Khandelwal)* அவர்களால் எழுதப்பட்ட *A Commentary & Digest on The Air, Act 1981* என்ற புத்தகத்தை சண்டிகரில் வெளியிட்டார்.

# 1.8 விருதுகள் மற்றும் கௌரவங்கள்

### 2019-ஆம் ஆண்டில் PEN கௌரி லங்கேஷ் விருது

- ஜம்மு மற்றும் காஷ்மீர் சேர்ந்த மூத்த பத்திரிக்கையாளர் யூசப் ஜமில், பத்திரிக்கைத் துறையில் சிறப்பான பங்களிப்பு செய்ததற்காகவும் ஜனநாயக லட்சிய வாதத்திற்கான 2019-20 ஆண்டிற்கான PEN கௌரி லங்கேஷ் விருதை வென்றார்

### சாந்தராம் விருது (Shantaram Award)

- திரைப்பட இயக்குநர் எஸ். கிருஷ்ணசுவாமி அவர்களுக்கு டாக்டர்.வி. சாந்தராம் வாழ்நாள் சாதனையாளர் விருது அவர்களுக்கு வழங்கப்பட்டது குறும்படம் எடுப்பதற்காக மேற்கொண்ட தனிப்பட்ட பங்களிப்பிற்காக இந்த விருது வழங்கப்பட்டது.
- இந்த விருதிற்காக ரூ. பத்து லட்சம் பரிசு தொகையாக வழங்கப்பட்டது. "From Indus Valley to India" என்ற குறும்படத்திற்காக இந்த விருது வழங்கப்பட்டது.

### சர்வதேச காந்தி விருது

- தொழுநோயாளிகளுக்காக சிறப்பாக சேவையாற்றியதற்காக டாக்டர் என்.எஸ். தர்ம சக்து அவர்களுக்கு சர்வதேச காந்தி விருதை குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்கள் வழங்கினார்.
- மகாத்மா காந்தி தொழுநோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு செய்த சேவைகளை நினைவு கூறும் வகையில் சர்வதேச காந்தி விருது வழங்கப்படுகிறது.

### எஃப்ஐஎச் வளரும் வீரர் விருது

- சர்வதேச ஹாக்கி சம்மேளனம் (எஃப்ஐஎச்) 2019 ஆம் ஆண்டின் வளரும் வீரர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். இந்திய அணியின் 19 வயது மிட்பீல்டர் விவேக் சாகர் பிரசாத்.

### மிஸ்டிக் கலிங்கா இலக்கிய விருது

- புகழ்பெற்ற ஒடியா மற்றும் ஆங்கில எழுத்தாளர் மனோஜ்தாஸ் அவர்களுக்கு மிஸ்டிக் கலிங்கா இலக்கிய விருது வழங்கப்பட்டது. இந்திய மற்றும் உலகளாவிய மொழிகளுக்கான மிஸ்டிக் கலிங்கா விழாவின் நான்காவது பதிப்பு ஒடிசா மாநிலத்தில் நடைபெற்றது. சமீபத்தில் நடைபெற்ற பத்ம விருதுகளில் பத்ம பூஷண் விருது இவருக்கு வழங்கப்பட்டது.

### சென்னை மகளிர் கூட்டுறவுக்கு விருது

- தேசத்தின் பொருளாதார வளர்ச்சிக்காக உதவிய சென்னை மகளிர் கூட்டுறவுக்கு (Women cooperative) விருதுகள் வழங்கப்பட்டன.
- சென்னையை சேர்ந்த பெண்கள் கூட்டுறவு அமைப்பு ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டது.

### 92வது ஆஸ்கர் விருது

- 92வது ஆஸ்கர் விருதுகள் வழங்கும் விழாவில் அயல்நாட்டு மொழித் திரைப்படப் பிரிவு என்பது "சர்வதேச சிறந்த திரைப்படம்" என்று பெயர் மாற்றப்பட்டது.
- சிறந்த திரைப்படப் பிரிவில் அயல்மொழியைச் சேர்ந்த படம் தேர்வு செய்யப்படுவது இதுவே முதன்முறை.ஆசிய கண்டத்தில் ஆஸ்கர் விருது வென்ற முதல் இயக்குநர் போங்ஜூன்ஹோ.
- சர்வதேச அளவில் கவனம் ஈர்த்த "பாராசைட்" திரைப்படம் சிறந்த திரைப்படம் (அயல்மொழி), சிறந்தஇயக்குநர், சிறந்த திரைக்கதை ஆகியபிரிவுகளில் 4 ஆஸ்கர் விருதுகளை அள்ளியது.

- விருதுப்பட்டியல்

| | |
|---|---|
| சிறந்த இயக்குநர் | போங்ஜூன்ஹோ (பாராசைட்) |
| சிறந்தநடிகர் | ஜாக்குவின்ஃபீனிக்ஸ் (ஜோக்கர்) |
| சிறந்த நடிகை | ரென்னிஜெல்வேகர் (ஜூடி) |
| சிறந்த துணை நடிகர் | பிராட்பிட் (ஒன்ஸ்அபான் ஏ டைம் இன்ஹாலிவுட்) |
| சிறந்த துணை நடிகை | லாராடெர்ன் (மேரேஜ்ஸ்டோரி) |
| சிறந்த அனிமேஷன் படம் | டாய்ஸ்டோரி 4 |
| சிறந்த அனிமேஷன் | ஹேர்லவ் |
| சிறந்த திரைக்கதை ஹன்ஜின்வோன் (பாராசைட்) | போங்ஜூன்ஹோ, |
| சிறந்த தழுவல் திரைக்கதை | தாய்காவைதிதி (ஜோஜோராபிட்) |
| சிறந்த குறும்படம் | த நெய்பர்ஸ்விண்டோ |
| சிறந்த ஆடை வடிவமைப்பு | ஜாக்குலின்டுரான் (லிட்டில்வுமன்) |
| தயாரிப்பு வடிமைப்பு | பார்பராலிங், நான்சிஹைக். (ஒன்ஸ் |
| சிறந்த ஆவணப் படம் | அமெரிக்கன் ஃபேக்டரி |
| சிறந்த ஒலித் தொகுப்பு | ஃபோர்டு வெர்ஸஸ்ஃ பெராரி டொனாஸ்டு சில்வஸ்டர்) |
| சிறந்த ஒலிக் கலவை | மார்க்டெய்லர், ஸ்டூவர்ட்வில்சன் 1917) |
| சிறந்த படத் தொகுப்பு | மைக்கேல் மெக்கஸ்கர், ஆண்ட்ரூ பக்லாண்ட் (ஃபோர்டுவெர்ஸஸ் ஃபெராரி) |
| சிறந்த ஒளிப்பதிவு | ரோஜர்டெகின்ஸ் (1917) |
| சிறந்த விஷுவல் | குல்லாம்ரோசெரன், கிரேக்பட்லர், எஃபெக்ட்ஸ் டொமினிக்டுஹோய் (1917) |
| சிறந்த ஒப்பனை மற்றும் சிகை அலங்காரம் | காஸூஹிரோ, அன்னேமார்கன், விவியன்பாகெர் (பாம்ஷெல்) |
| சிறந்த பின்னணி இசை (ஜோக்கர்) | ஹில்துர் குட்னா டோட்டிர் (ஜோக்கர்) |

### எஃப்ஐஎச் விருது

- 2019-ஆம் ஆண்டுக்கான எஃப்ஐஎச் வளரும் வீராங்கனை விருதைப் இந்திய ஹாக்கி அணியின் லால்ரேமிசியாமி பெற்றார்.

### ஜீனோம் வேலி சிறப்பு விருது

- அமெரிக்க நோயெதிர்ப்பு மற்றும் புற்றுநோய் நிபுணர் டாக்டர் கார்ல் எச் ஜீன் மற்றும் நோவார்டிஸ் தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர் வசந்த் நரசிம்மா ஆகியோருக்கு பயோ ஏசியா 2020இன் ஜினோம் வேலி சிறப்பு விருது வழங்கப்பட்டது.
- இந்த விழாவை ஆண்டுதோறும் தெலுங்கானா அரசு உலகளாவிய உயிர் தொழில்நுட்பம் மற்றும் வாழ்க்கை அறிவியல் மன்றம் ஏற்பாடு செய்கிறது.

**சிறந்த மகளிர் மேம்பாட்டுப் பணி: என்எல்சி நிறுவனத்துக்கு தேசிய விருது**

- மகளிர் மேம்பாட்டுப் பணிகளை சிறப்பாக மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கான தேசிய விருதின் 2-ஆம் பரிசு என்எல்சி இந்தியா நிறுவனத்துக்கு அண்மையில் வழங்கப்பட்டது.
- 'விப்ஸ்' அமைப்பானது மகளிர் மேம்பாட்டுக்காக சிறந்த முயற்சிகளை மேற்கொண்டு வரும் பொதுத் துறை நிறுவனங்களை ஆண்டுதோறும் தேர்வு செய்து விருது வழங்கி கௌரவித்து வருகிறது.
- என்எல்சி இந்தியா நிறுவனம் தனது சமூகப் பொறுப்புணர்வுத் திட்டத்தின் கீழ் 'விப்ஸ்' அமைப்பின் நெய்வேலி மைய பொறுப்பாளர்கள் மூலம் மேற்கொண்டு வரும் நலப் பணிகளால், நவரத்னா பிரிவில் இரண்டாம் இடத்துக்கான விருதைப் பெற்றது.
- ஹைதராபாதில் அண்மையில் நடைபெற்ற 'விப்ஸ்' அமைப்பின் 30-ஆவது தேசிய மாநாட்டின் தொடக்க விழாவில், 'ஸ்கோப்' அமைப்பு 2019-ஆம் ஆண்டுக்கான விருதை வழங்கியது.

# 1.9 இந்தியா மற்றும் அண்டை நாடுகள்

**தாய்ப்பால் கொடுக்கும் ஆதரவு கொள்கைகள் மற்றும் திட்டங்கள்**

- தாய்ப்பால் கொடுக்கும் ஆதரவு கொள்கைகள் மற்றும் திட்டங்களில் இலங்கை நாடு முதலிடத்தில் உள்ளது. இலங்கை 100இல் 91 புள்ளிகளைப் பெற்று பச்சை வண்ணக் குறியீட்டை பெற்றது. எனவே தாய்ப்பால் கொடுக்கும் பெண்களுக்கு ஆதரவளிப்பதில் "பச்சை" நிற அந்தஸ்தைப் பெற்ற முதல் நாடு என்ற பெருமையை பெற்றது.

**பூட்டான் செல்லும் இந்தியப் பயணிகளுக்கு கட்டணம்**

- பூட்டானுக்கு சுற்றுலா செல்லும் இந்தியர்கள் மாலத்தீவைச் சேர்ந்தவர்கள் மற்றும் வங்கத்தேசத்தவர் தவிர மற்றவர்களிடம் சுற்றுலாக் கட்டணம் வசூலிக்கப்பட்டு வந்தது. இந்த கட்டணம் சுற்றுலா பருவ காலங்களில் தினம் 250 டாலராகவும் மற்ற காலங்களில் தினம் 20 டாலராகவும் இருந்தது. இந்த கட்டணத்தில் இருந்து இந்தியர்கள் வங்க தேசத்தவர் மற்றும் மாலத்தீவில் வசிப்போருக்கு விலக்கு வழங்கப்பட்டிருந்தது.
- பூட்டான் நாட்டுக்குச் செல்லும் இந்தியப் பயணிகள் தினம் ரூ.1200 ($17) கட்டணம் செலுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**அருண்-3 நீர்மின் சக்தி திட்டம்**

- நேபாளத்தின் மிகப்பெரிய நீர்மின் திட்டமான அருண்-3 நீர்மின் திட்டம், இந்தியா ஆதரவுடன் நேபாளத்தின் சங்குவாசபா மாவட்டத்தில் அருண் ஆற்றில் கட்டப்பட்டு வருகிறது.
- தற்போது இத்திட்டத்திற்காக 100 மில்லியன் இந்தியா வழங்கி உள்ளது. இதன் உற்பத்தி திறன் 900 மெகாவாட் திறன் கொண்டது.
- இந்தியாவின் சட்லக் ஜல் வித்யுத் நிஹாம் என்ற நிறுவனம் இந்த நீர்மின் திட்டத்தை உருவாக்கி வருகிறது. வரும் 2023ஆம் ஆண்டு உற்பத்தியை தொடங்க உள்ளது.
- இந்தியாவின் 5 வங்கிகள் இந்த திட்டத்திற்காக ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. அவைகள் ஸ்டேட் ஃபேங்க் ஆஃப் இந்தியா, கனரா வங்கி, ஆக்ஸிம் வங்கி, யூனியன் வங்கி ஆஃப் இந்தியா, பஞ்சாப் நேஷனல் வங்கி ஆகும்.

### INS ஜமுனா

- இந்திய கப்பற்படை கப்பல் ஜமுனா நீர்பரப்பு கணக்கீடுகளை மேற்கொள்ளும் பணியை இலங்கையை ஒட்டியுள்ள கடற்கரைப் பகுதிகளில் மேற்கொண்டு வருகின்றது.
- இந்த கணக்கெடுப்புகள் இரண்டு மாதத்திற்கு நடைபெற உள்ளது.

## 1.10 நியமனங்கள்

### 2019-ஆம் ஆண்டின் மத்திய வங்கியாளராக சக்தி தாஸ் தேர்வு

- இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் சக்திகாந்த் தாஸ் ஆண்டின் சிறந்த மத்திய வங்கியாளராக *(Central Banker of the Year)* ஆசிய பசிபிக் பிராந்தியத்தின் சார்பாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்று இங்கிலாந்தின் தி வங்கியர் இதழ் *(The Banker Magazine)* அறிவித்துள்ளது.

### பிரிட்டன் நிதி அமைச்சரனார் ரிஷி சுனக்

- இன்ஃபோசிஸ் இணை நிறுவனர் நாராயண மூர்த்தியின் மருமகன் ரிஷி சுனக் பிரிட்டனின் புதிய நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டார்.
- பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன், தனது அமைச்சரவையை மாற்றி அமைத்தார்.
- அப்போது, புதிய நிதி அமைச்சராக ரிஷி சுனக்கை அவர் நியமித்தார்.
- இந்தியாவைப் பூர்விகமாகக் கொண்ட பிரீத்தி படேல், அலோக் சர்மா ஆகியோரைத் தொடர்ந்து ரிஷி சுனக் பிரிட்டன் அமைச்சரவையில் இணைந்துள்ளார்.

## 1.11 கலாச்சாரம்

### நகோபா ஜாத்ரா திருவிழா

- நகோபா ஜாத்ரா பழங்குடியின திருவிழா தெலுங்கானா மாநிலத்தில் கொண்டாடப்பட்டது. தெலுங்கானாவின் ஆதிலாபாத் மாவட்டம், கெஸ்லாப்பூர் கிராமத்தில் இந்த விழா முக்கியமாக கொண்டாடப்பட்டது.
- இது இரண்டாவது பெரிய பழங்குடியின திருவிழாவாகும். இது கோண்ட் பழங்குடியினரின் மேசாரம் குலத்தினரால் ஒரு மாதம் கொண்டாடப்படுகிறது.

### காலா கோடா கலை விழா (Kala Ghoda Arts Festival)

- இந்தியாவின் மிகப்பெரிய திறந்தவெளி கலை மற்றும் கலாச்சார விழாக்களில் ஒன்றான காலா கோடா விழாவின் 21வது பதிப்பு பிப்ரவரி 1ம் தேதி மும்பையில் தொடங்கியது.
- இத்திருவிழா ஒன்பது நாட்கள் நடைபெறுகிறது. இந்த திருவிழா கடந்த 1999 ஆம் ஆண்டு முதல் மும்பையின் காலா கோடா பகுதியில் நடைபெறுகிறது. இதன் மையக்கருத்து *'PAST FORWARD'* என்பதாகும்.

### ஹார்ன்பில் திருவிழா (Horbill Festival)

- வடகிழக்கு மாநிலங்களில் ஒன்றான திரிபுரா முதன் முறையாக ஹார்ன்பில் திருவிழாவை கொண்டாடியது. மேற்கு திரிபுரா மாநிலத்தில் உள்ள பரம்முறா மலையில் *(Baramura hills)* அம்மாநில முதலமைச்சர் பிப்லாப் குமார் தேவ் தொடங்கி வைத்தார்.
- இத்திருவிழாவை முதன் முறையாக திரிபுரா மாநிலத்தில் கொண்டாடப்பட்டது. இதன் முக்கிய நோக்கம் மக்கள் பறவைகளை பாதுகாக்கவும் மற்றும் சுற்றுலாவை மேம்படுத்துவது ஆகும்.

# 1.12 சமீபத்திய வரலாற்று நிகழ்வு

### பிரிட்டன், இளவரசியின் பரிசு

- 1914ம் ஆண்டு இங்கிலாந்து நாட்டின் இளவரசியான மேரி, மதராஸ் ஆட்சியராக பணியாற்றிய ராபர்ட் கென்னடிக்கு அனுப்பிய கிறுஸ்துமஸ் பரிசு, நினைவு சின்னமாக பாதுகாக்கப்பட்டு வருகிறது.
- இம்பீரியம் பிரிட்டானியா என பொறிக்கப்பட்டு, இங்கிலாந்து அரசரின் முகம் பொறிக்கப்பட்ட அந்த பெட்டி போன்ற சின்னம் இங்கிலாந்து ஏகாதிபத்தியத்தின் நினைவாக பாதுகாக்கப்பட்டு வருகிறது.

### இட ஒதுக்கீடு என்பது அடிப்படை உரிமை அல்ல

- அரசுப் பணிகளுக்கான நியமனம் மற்றும் பதவி உயர்வுகளில் இடஒதுக்கீடு வழங்குவது கட்டாயமல்ல. மாநில அரசு விரும்பினால் மட்டுமே இடஒதுக்கீடு வழங்கலாம் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- அரசியலமைப்பு சட்டப்பிரிவு 16 (4) மாநில அரசுகள் இட ஒதுக்கீடு வழங்க அதிகாரம் மட்டுமே அளிக்கிறது. ஆனால், இடஒதுக்கீடு பெறுவது ஒருவரது அடிப்படை உரியல்ல.
- இடஒதுக்கீடு தேவையற்றது என்று மாநில அரசு நினைத்தால் அதில் எந்த தவறும் இல்லை.
- தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு போதிய பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை என்று நீதிமன்றத்தை யாராவது அணுகினாலும் நீதிமன்றத்தால் இடஒதுக்கீடு வழங்கும்படி மாநில அரசுக்கு உத்தரவிட முடியாது.
- இடஒதுக்கீடு தேவையில்லை என்ற மாநில அரசின் முடிவில் நீதிமன்றம் தலையிட முடியாது. இவ்வாறுஉச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
-

### பாலியல் குற்றங்களை புகார் தெரிவிப்பவர்களுக்கு பாதுகாப்பு வழங்க முடியாது

- வேலையிடங்களில் பெண்களுக்கு எதிராக நடைபெறும் குற்றங்களை புகார் தெரிவிப்பவர்களுக்கு பாதுகாப்பு வழங்க முடியாது என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.
- பணியிடத்தில் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் துன்புறுத்தல் (தடை, பாதுகாப்பு மற்றும் நிவர்த்தி) சட்டம் 2013படி, புகார்கள் தெரிவிப்பவர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று கூறி, புகார் தெரிவிப்பவர்களுக்கு பாதுகாப்பு வழங்க முடியாது என்று மனுவை நிராகரித்தது.

### பாண்டிய மன்னர் காலத்து பாடல் கல்வெட்டு கண்டெடுப்பு

- விருதுநகர் மாவட்டம் கல்குறிச்சி அருகே உள்ள கணக்கனேந்தல் கிராமத்தில் பாண்டிய மன்னர் காலத்துக்கு பாடல் கல்வெட்டு கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- விருதுநகர் மாவட்டம், கணக்கனேந்தலில் கண்டெடுக்கப்பட்ட இந்த கல்வெட்டு தமிழ்ப் பாடல் வடிவில் அமைந்துள்ளது.
- "ஸ்ரீ அன்னமென்னும் நடை" என்ற தொடருடன் கல்வெட்டு தொடங்குகிறது. புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதியில் கோயிலில் இருக்கும் முதலாம் மாறவர்மனின் கல்வெட்டில் காணப்படும் தொடரைப் போன்று காணப்படுகிறது.
- இந்த கல்வெட்டில் சதுர ஆண்டு 1139 எனக் குறிக்கப்பட்டுள்ளது. இது கிறிஸ்துவ ஆண்டு 1217-ஐக் குறிப்பதாகும்.



# 2. அரசியல் அறிவியல்

## 2.1 சமீபத்திய நீதிமன்றத் தீர்ப்புகள்

### கிராம நியாயாலயங்கள் அமைக்க மாநிலங்களுக்கு உச்சநீதி மன்றம் உத்தரவு

- இந்திய உச்சநீதிமன்றம் நான்கு வாரங்களுக்குள் "கிராம நியாயாலங்களை" (Gram Nyayalayas) அமைக்க மாநில அரசுக்கு உத்தரவித்துள்ளது.
- மாநில அரசுடன் கலந்தாலோசித்து செயல்பட உயர்நீதி மன்றங்களுக்கு உத்தரவிட்டுள்ளது.
- கிராம நியாயாலய சட்டம் 2008ன் படி கிராம நியாயாலயங்கள் அமைக்கப்பட வேண்டும். இதன் முக்கிய நோக்கம் கிராமப்புறங்களில் செலவு ஏதுமின்றி வழக்குகளை தீர்த்து நீதியை பெற முடியும்.

### 28 சிறப்பு விரைவு நீதிமன்றம்

- கேரளா மாநிலத்தின் போக்ஸோ வழக்குகளை விசாரிக்க 28 சிறப்பு நீதிமன்றங்களை மார்ச் மாதத்திற்குள் அம்மாநில அரசு அமைக்க உள்ளது. அம்மாநிலத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் 7,000 போக்ஸோ வழக்குகள் நிலுவையில் உள்ளன. இவ்வழக்குகளை இந்த சிறப்பு விரைவு நீதிமன்றங்கள் விசாரிக்க உள்ளன.
- ஒவ்வொரு விரைவு நீதிமன்றங்களில் அதிகபட்சமாக 165 வழக்குகளை விசாரிக்க உள்ளது. அனைத்து விரைவு நிதிமன்றங்களுக்கும் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதிகள் தலைமை தாங்க உள்ளன.

### போக்ஸோ சட்டம்

- இந்த சட்டம் 2012ஆம் ஆண்டு நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. 18 வயதுக்குக் குறைவான அனைத்துக் குழந்தைகளும் பாலின வித்தியாசமின்றி பாலியல் துன்புறுத்தலில் இருந்து காப்பதற்காக இந்த சட்டம் கொண்டு வரப்பட்டது.

### வன்கொடுமை வழக்குகளில் முன்ஜாமீன் கிடையாது

- தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் மூலம் பொய்யான வழக்குகள் பதிவு செய்யப்படுவதாகத் தெரிவித்த உச்சநீதிமன்றம், அச்சட்டத்தின் விதிகளைத் திருத்தி கடந்த 2018-ஆம் ஆண்டு மார்ச் மாதம் உத்தரவிட்டது.
- எஸ்.சி.இ எஸ்.டி. வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்படும் நபர்களை விசாரணையின்றி கைது செய்ய முடியாத சூழல் ஏற்பட்டது. (Dr. Subhash Kashinath Mahajan Vs State of Maharastra) குற்றஞ்சாட்டப்படும் நபர்கள் முன்ஜாமீன் பெறவும் வழி வகை செய்யப்பட்டது.
- இதனிடையே, குற்றஞ்சாட்டப்படும் நபர்கள் மீது விசாரணை ஏதுமின்றி முதல் தகவல் அறிக்கை (எஃப்ஐஆர்) பதிவு செய்யவும், அவர்கள் முன்ஜாமீன் பெற முடியாத வகையிலும், குற்றச்சாட்டுக்கு உள்ளாகும் நபர்களைக் கைது செய்வதற்கு உயரதிகாரிகளின் அனுமதியைப் பெற வேண்டிய அவசியமில்லாத வகையிலும் எஸ்.சி., எஸ்.டி. வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில்மத்திய அரசு திருத்தங்களை மேற்கொண்டது.
- மத்திய அரசு மேற்கொண்ட சட்டத்திருத்தத்தை உச்சநீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது.

# 2.2 மத்திய அரசாங்கம் - பொதுநலம் சார்ந்த அரசுத் திட்டங்கள், அவற்றின் பயன்பாடுகள்

### அனைவருக்கும் வீடு 2022

- பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா கிராமின் திட்டத்தின் கீழ் 2022க்குள் அனைவருக்கும் வீடுவசதி என்ற நோக்கத்தை அடைய மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.
- கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒருகோடியே 50 லட்சம் கிராமபுற வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- இரண்டாம் கட்டமாக ஒருகோடியே 95 லட்சம் வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது .
- பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா
- மத்திய அரசு 2022 மார்ச் 31க்குள் நகர்புற ஏழைகளுக்கு வீடுகள் கட்டி தர இலக்கு நிர்ணயித்துள்ளது.
- இதில் இரண்டு வகையான திட்டங்கள் உள்ளன. அவைகள் நகர்ப்புற ஏழைகளுக்கு வீடுகள் கட்டி தர பிரதான் மந்திரி ஆவாஸ் நகர்ப்புற யோஜானா, கிராமப்புற ஏழைகளுக்கு வீடுகள் கட்டி பிரதான் மந்திரி ஆவாஸ் கிராமின் யோஜனா என்ற திட்டமும் உள்ளது.

### உதான் திட்டம்

- சென்னை-பெங்களூரு இடையே விரைவுச் சாலைக்கான பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்று பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.
- கர்நாடகம், தமிழகம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் வழியாக இந்த விரைவுச் சாலை அமைக்கப்படும். ‘உடான்’ திட்டத்தின் கீழ் புதிதாக 100 விமான நிலையங்கள் உருவாக்கப்படும் என்று மத்திய பட்ஜெட்டில் தொிவிக்கப்பட்டுள்ளது.

### பிரதான் மந்திரி மாத்ரூ வந்தன யோஜனா

- பிரதான் மந்திரி மாத்ரூ வந்தனா யோஜனாவை நடைமுறைப்படுத்துவதில் முதல் இடத்தில் மத்திய பிரதேசம் உள்ளது.
- இந்த திட்டத்தின் சிறந்த செயல்திறனுக்காக இந்தூர் மாவட்டம் முதல் இடத்தைப் பிடித்துள்ளது.
- கர்ப்பம் தரித்த மகளிரின் நலனுக்காக மத்திய அரசு “பிரதான் மந்திரி மாத்ரூ வந்தனா யோஜனா“வை (பிஎம்எம்விஒய்) கொண்டு வந்துள்ளது.
- அத்திட்டம் 2016 டிசம்பர் 31-ல் பிரதம மந்திரியால் தொடங்கப்பட்டது.
- “தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2013“-ன் கீழ் ஒவ்வொரு கர்ப்பிணிக்கும் கர்ப்பகால தேவைகளுக்காக ரூ.6,000 தரப்படுகிறது.

### 100 அங்கன்வாடி மையங்கள்

- அங்கன்வாடி என்பது இந்திய அரசால் நடத்தப்படும் தாய்சேய் நல மையம் ஆகும். பிறந்த ஆறு வயது வரை உள்ள குழந்தைகளுக்கான சேவைகள் வழங்கப்படுகின்றன.
- 1975ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுச் சேவைகள் திட்டத்தின் கீழ் குழந்தைகளில் ஊட்டச்சத்து குறைப்பாட்டை போக்கவும் இம்மையங்கள் துவங்கப்பட்டன. இதன் மூலம் ஆறு சேவைகள் வழங்கப்படுகின்றன.
- தற்போது இந்த மையங்களில் பயனாளிகள் பயன்பெறுவது குறைந்து வருவதாக தகவல் உரிமை சட்டத்தின் மூலம் தெரிய வந்துள்ளது.

### மத்திய அரசாங்கம்-பொதுநலம் சார்ந்த அரசு திட்டங்கள், அவற்றின் பயன்பாடுகள்:

### பாரம்பரிய தொழில்கள் அமைக்க நிதி உதவி

- சிறு, குறு மற்றும் நடுத்தர அமைச்சகம் Scheme of Fund for Regeneration of Traditional Industries (SFURTI) என்ற திட்டத்தை தொடங்கி உள்ளது.
- இத்திட்டம் மூலம் புதியதாக பாரம்பரிய தொழில்களை தொடங்க இத்திட்டத்தின் கீழ்

நிதியுதவி வழங்கப்பட உள்ளது.
- பாரம்பரிய தொழில்களை மறு உருவாக்கம் செய்வதற்கான நிதி திட்டம்
- ஐந்து ஆண்டுகளில் நாட்டில் பாரம்பரிய தொழில்கள் பெருமளவில் உருவாக்கவும், வேலைவாய்ப்பை பெருக்கவும் வேண்டும்.
- இதன் மூலம் உற்பத்தி அதிகப்படுத்துதல், சந்தை மையப்படுத்துதல் மற்றும் லாபம் ஈட்டுதல் அதிகரிக்க அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

# 2.3 அரசியல் கட்சிகள் மற்றும் இந்திய அரசியல் அமைப்புகள்

**இரட்டை குடியுரிமை கிடையாது**

- குடியுரிமை சட்டம் 1955 படி இரட்டை குடியுரிமை வழங்க முடியாது என்று நாடாளுமன்றம் தெரிவித்துள்ளது. சமீபத்தில் தமிழக சட்டபேரவை கூட்டம் நடைபெற்றது. இதில் தமிழக ஆளுநரான பன்வாரிலால் புரோகித் அவர்கள் ஸ்ரீலங்காவை சேர்ந்த தமிழர்களுக்கு தமிழகத்தில் வாழ இரட்டை குடியுரிமை வழங்க வேண்டும் என்று தெரிவித்தார்.
- இதற்கு பதிலளிக்கும் விதமாக நாடாளுமன்றம் இரட்டை குடியுரிமை வழங்க முடியாது என்று தெளிவுப்படுத்தப்பட்டு உள்ளது.
- 1964ஆண்டு ஸ்ரீமாவோ-சாஸ்திரி ஒப்பந்தம் மற்றும் 1974 ஆண்டு ஸ்ரீமல்-இந்திராகாந்தி ஒப்பந்தம் மூலம் இந்திய வம்சாவளி தமிழர்களுக்கு (6 லட்சம்) இந்திய குடியுரிமை வழங்கியது குறிப்பிடத்தக்கது.

**வாக்குசாவடியில் முதல் முக அடையாள மென்பொருள் (First Trial of Facial Tech in Polls)**

- தெலங்கானாவில் நடைபெற்ற தேர்தலில் வாக்கு சாவடியில் முதல் முக அடையாள மென்பொருள் தொழில்நுட்ப சோதனை நடத்தப்பட்டது.
- கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற நகராட்சி தேர்தலில் இந்த மென்பொருள் பயன்படுத்தப்பட்டது.
- 10 வாக்கு சாவடியில் மொத்தம் 7200 பேர் இந்த முக அடையாள மென்பொருள் மூலம் அடையாளம் காணப்பட்டனர். இது இந்தியாவின் முதல் வாக்காளர் முக அடையாள காணும் சோதனை ஆகும்.

# 3. புவியியல்



## 3.1 சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய கொள்கை

### மட்லா அபியான் (Matla Abhiyan)

- இந்திய கப்பற்படை சமீபத்தில் கொல்கத்தாவில் கடலோர பாதுகாப்புப் பயிற்சியைத் தொடங்கியது. உள்ளூர் சமூகத்திற்கு கடலோர பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த பயிற்சி மேற்கொள்ளப்பட்டது.
- சுந்தரவனப் பகுதிகள் பிராந்தியத்தில் இந்திய கடலோர பாதுகாப்பு படையினரால் இந்த பயிற்சி மேற்கொள்ளப்பட்டது.
- இந்தியாவிற்கும், வங்கதேசத்திற்கும் இடையிலான சர்வதேச வர்த்தக பாதையில் இந்த மட்லா அபியான் பயிற்சி உள்ளூர் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்டது.

### பெருநகரங்களில் வெப்பநிலை அதிகரிப்பு: ஆய்வில் தகவல்

- மேற்கு வங்க மாநிலம், கரக்பூர் ஐஐடி-யில் செயல்படும் ‘கடல்கள், ஆறுகள், வளிமண்டலம், நில அறிவியல் மையம்’ மற்றும் அந்த ஐஐடி-யின் கட்டுமானங்கள் வடிவமைப்பு, திட்டமிடல் துறை ஆகியவை சார்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.
- அதில், கடந்த 2001 முதல் 2017-ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில், நாட்டிலுள்ள நகரங்களின் வெப்பநிலை தொடர்பான தரவுகள் ஆய்வுக்குள்படுத்தப்பட்டன.
- இந்த நகரங்களில் அனைத்து பருவ காலங்களிலும், பகல் மற்றும் இரவு நேரங்களிலும் வெப்பநிலை உயர்ந்து வருவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.
- கொல்கத்தா, புணே, குவாஹாட்டி ஆகிய நகரங்களின் பகுதிகளில் பசுமை பரப்பு அதிகம் காணப்படுவதால், அங்கு வெப்பநிலை அதிகரிப்பின் தாக்கம் குறைவாக உள்ளது.

### பேரிடர் மேலாண்மை பயிற்சி

- இந்திய அரசின் தேசிய பேரிடர் கால மீட்பு படை பிம்ஸ்டெக் (BIMSTEC) பேரிடர் மேலாண்மை பயிற்சி 2020 இரண்டாவது பதிப்பு நடத்துகிறது.
- இந்த பயிற்சி புவனேஷ்வர் நகரில் நடைபெறுகிறது. வெள்ளம், நிலநடுக்கம், புயல்களின் போது தற்போதுள்ள மீட்ப்பு நடைமுறைகளில் உள்ள பிரச்சனைகள் பற்றி பயிற்சியில் சோதிப்பதே இப்பயிற்சியின் முக்கிய நோக்கம்.
- பேரிடர்காலங்களில் சேதமடைந்த பாரம்பரிய தளங்களை மீட்டெடுப்பதை இப்பயிற்சி வலியுறுத்துகிறது.
- இப்பயிற்சியின் மையக்கருத்து *A Cultural Heritage Site that suffers severe damage in the Earthquake and Flooding or Storm* என்பதாகும்.

**கிரேட் பேக்யார்டு பறவைக் கணக்கெடுப்பு**

- கிரேட் பேக்யார்டு (புழக்கடை) பறவைக் கணக்கெடுப்பு பிப்ரவரி 14 முதல் 17 வரை இந்தியாவில் நடைபெறுகிறது. GBBC – Great Backyard Bird Council என்பது காடுகளில் வாழும் பறவைகள் பற்றிய தரவுகளைச் சேகரித்த நிகழ் நேரத்தில் முடிவுகளைக் காண்பிக்கும் முதலாவது நிகழ்நேர குடிமக்கள் அறிவியல் திட்டமாகும். இதில் பங்கேற்பவர்கள் 4 நாட்கள் நடைபெறக்கூடிய நிகழ்ச்சியில் அனைத்து நாட்களிலும் ஏதாவது ஒரு 15 நிமிடங்களிலும் பறவைகளைக் கணக்கிட வேண்டும்.
- சமீபத்திய இந்த கணக்கெடுப்பில் லாடக் மாநிலத்தில் சிவப்பு கொண்டை மற்றும் பிளம்பியல் எனும் இரண்டு வகை புதிய பறவையினங்கள் கண்டறிப்பட்டுள்ளது.

**எறும்புத் திண்ணி உடல்களில் ரேடியோ சிப் பொருத்தம்**

- விஞ்ஞானிகள் இந்திய எறும்புத் திண்ணிகள் உடலில் ரேடியோ-அலைகள் (Radio-tag) பொருந்திய சிப் பொருத்தி உள்ளனர்.
- இந்திய எறும்பு திண்ணி கடின உடல் அமைப்பு கொண்டது.
- மேலும் இறைச்சிக்காகவும், சீன பாரம்பரிய மருத்துவத்துக்காகவும் இந்த எறும்பு திண்ணிகள் கடத்தப்படுகிறது. இவற்றை தடுப்பதற்காக இதன் உடலில் இந்த சிப் பொருத்தப்பட்டுள்ளது. கடத்தலை கண்காணிப்பதற்காகவும் இந்த சிப் பொருத்தப்பட்டுள்ளது.
- உலகின் மிகவும் கடத்தப்படும் விலங்குகளில் எறும்புத் திண்ணி விலங்கு உள்ளது. எட்டு எறும்பு திண்ணி வகைகளில் இந்திய மற்றும் சீன எறும்புதிண்ணி இந்தியாவில் காணப்படுகின்றது.
- இந்த இரண்டு வகைகளும் வனவிலங்கு பாதுகாப்பு சட்டம் 1972ல் அட்டவணை 1யில் பட்டியலிடப்பட்டுள்ளது.

**அண்டார்டிகா முதல் முறையாக 20 டிகிரி வெப்பம்**

- அண்டார்டிகா பனிக் கண்டத்தின் வெப்பநிலை 20.75 டிகிரி செல்ஷியஸ் வரை (69.35 டிகிரி ஃபாரன்ஹீட்) உயர்ந்ததை விஞ்ஞானிகள் பதிவு செய்துள்ளன.
- அந்தப் பகுதியில் வெப்ப நிலை 20 டிகிரியைத் தாண்டியது இதுவெ முதல் முறை என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.



# 4. பொருளாதாரம்

## 4.1 புதிய பொருளாதாரக் கொள்கை மற்றும் அரசுத்துறை

### 24×7 சேவை வழங்கல் கருவி அறிமுகம்

- இந்திய நிதி நிறுவனமான ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி, மகாராஷ்டிராவின் மும்பையில் உள்ள ஒரு கிளை ஒன்றில் ஐபாக்ஸ் (iBox) எனப்படும் வாடிக்கையாளர்களுக்காக முதன்முதலில் 24×7 சுய சேவை வழங்கல் கருவியை அறிமுகப்படுத்தி உள்ளது. 17 நகரத்தில் 50 கிளைகள் அமைக்கப்பட உள்ளது.

### மாநிலங்களுக்கு வரி பகிர்ந்தளிப்பு 42% வழங்க முடிவு

- பதினைந்தாவது நிதிகுழு பாராளுமன்றத்தில் வரும் 2020-21 ஆண்டுக்கான பட்ஜெட்டில் மாநிலங்களுக்கு இடையிலான வருமானம் பகிர்வு 42% வழங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளது. புதியதாக உருவான ஜம்மு & காஷ்மீர் மாநிலத்திற்கு மட்டும் வருமான பகிர்வு 41% வழங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

### பட்ஜெட் உரையில் திருக்குறள், ஆத்திசூடியை மேற்கோள் காட்டிய நிர்மலா சீதாராமன்

- நாடாளுமன்றத்தில் 2020-21 ஆம் நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட்டை தாக்கல் செய்த போது, திருக்குறள் மற்றும் ஆத்திசூடி உள்ளிட்டவற்றை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் மேற்கோள் காட்டி உரையாற்றினார்.
- ஒரு சிறந்த நாடு எவ்வாறு இருக்க வேண்டும் என்று திருக்குறளின் 74-ஆவது அதிகாரத்தின் (நாடு) கீழ்வரும் 738-ஆவது குறளில்

**”பிணியின்மை செல்வம் விளைவு இன்பம் ஏமம்**
**அணிஎன்ப நாட்டிற்கு இவ்வைந்து”**

என்ற திருக்குறளை மேற்கோளாக கூறினார்.

- நோயற்ற வாழ்வு, விளைச்சல் மிகுதி, பொருளாதார வளம், இன்ப நிலை, உரிய பாதுகாப்பு ஆகிய ஐந்துமே ஒரு நாட்டுக்கு அழகு என்பது இந்த திருக்குறளின் விளக்கமாகும்.
- நோயற்ற வாழ்வுக்காக ஆயுஷ்மான் பாரத் திட்டம், விவசாயிகளின் நலனுக்காக பிரதமர் விவசாயிகள் நிதியுதவி திட்டம் (பிஎம்-கிசான்), பொருளாதார வளத்துக்காக பல்வேறு நடவடிக்கைகள், மக்களின் இன்பத்துக்காக அனைவருக்கும் எளிதாக கிடைக்கும் வாழ்க்கை முறை, தேச பாதுகாப்பு என மேற்கண்ட திருக்குறளின் விளக்கமாகும்.
- ஆத்திசூடி: திருக்குறளை மேற்கோள் காட்டுவதற்கு முன்பாக ஔவையார் எழுதிய ஆத்திசூடியையும் நிர்மலா சீதாராமன் மேற்கோள் காட்டினார். “பூமி திருத்தி உண்” என்ற வரியில் விவசாயத்தின் முக்கியத்துவத்தை ஔவையார் தெரிவித்துள்ளதாக அவர் கூறினார்.
- நிலத்தை பண்படுத்தி, அதில் பயிர் செய்து, விளைந்த நெல்லை உண்ண வேண்டும் என்பது இந்த வரியின் அர்த்தமாகும்.

| புதிய வருமான வரிதிட்டம் | வரிவிகிதம் |
|---|---|
| ரூ. 5 லட்சம் வரை | 0% |
| ரூ. 5 லட்சத்திலிருந்து – ரூ. 7.5 லட்சம் வரை | 10% |
| ரூ. 7.5 லட்சத்திலிருந்து – ரூ. 10 லட்சம் வரை | 15% |
| ரூ. 10 லட்சத்திலிருந்து – ரூ. 12.5 லட்சம் வரை | 20% |
| ரூ. 12.5 லட்சத்திலிருந்து – ரூ. 15 லட்சம் வரை | 25% |
| ரூ. 15 லட்சத்துக்கு மேல் | 30% |

## துறைவரியாக ஒரு பார்வை: வேளாண்த்துறை

- வேளாண் கடன்கள் இலக்கு – ரூ. 15 லட்சம் கோடி.
- விவசாயப் பொருள்களை எடுத்துச் செல்ல இந்திய ரயில்வேயின் அரசு-தனியார் ஒத்துழைப்பில் 'கிசான் உடான்' திட்டம்.
- விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் 'கிசான் உடான்' திட்டம்.
- சூரியசக்தியில் இயங்கும் பம்புகள் அமைக்க 20 லட்சம் விவசாயிகளுக்கு நிதியுதவி.
- பால் பதப்படுத்துவதற்கான திறனை 2025-ஆம் ஆண்டுக்குள் இரட்டிப்பாக்குதல்.
- மீன் உற்பத்தியை 2022-23 நிதியாண்டுக்குள் 200 லட்சம் டன்னாக அதிகரித்தல்.
- 2024-25 நிதியாண்டுக்குள் ரூ. 1 லட்சம் கோடி அளவுக்கு மீன்களை ஏற்றுமதி செய்தல்.
- கால்நடைகளில் கோமாரி உள்ளிட்ட நோய்களை 2025-ஆம் ஆண்டுக்குள் ஒழிப்பதற்கான திட்டம்.

## சுகாதாரத்துறை

- 'ஆயுஷ்மான்' திட்டத்தின் கீழ் அரசு-தனியார் ஒத்துழைப்பில் மருத்துவமனைகள் தொடங்குதல்.
- 2025-ஆம் ஆண்டுக்குள் காசநோயை ஒழிப்பதற்கான திட்டம்.
- தொற்றா நோய்களை எதிர்கொள்ள 'ஃபிட் இந்தியா' திட்டம்.
- நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் 2024-ஆம் ஆண்டுக்குள் மலிவு விலை மக்கள் மருந்தகங்களை அமைத்தல்.
- நாடு முழுவதும் மாவட்ட மருத்துவமனைகளில் மருத்துவக் கல்லூரிகள் அமைக்கவும். கூடுதலாக மருத்துவர்களை நியமிக்கவும் திட்டம்.

## கல்வித்துறை

- புதிய கல்விக் கொள்கை விரைவில் வெளியிடப்படும்.
- உயர் கல்வியில் அந்நிய நேரடி முதலீடுகளை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகள்.
- திறன் மேம்பாட்டுக்கு ரூ. 3 ஆயிரம் கோடி ஒதுக்கீடு.
- தேசிய காவல் பல்கலைக்கழகம், தேசிய தடய அறிவியல் பல்கலைக்கழகம் அமைக்க நடவடிக்கை.
- வெளிநாடுகளில் பணிபுரிய விரும்புவோருக்கான திறனை மேம்படுத்துவதற்கான பயிற்சி வகுப்புகள்.
- ஒடுக்கப்பட்ட பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்கு இணையவழிக் கல்வி.

## தொழில்துறை

- செல்லிடப்பேசி, மின்னணு சாதனங்கள் உற்பத்தியை ஊக்குவிக்க புதிய திட்டம்.
- ரூ. 1,480 கோடி செலவில் தேசிய ஜவுளி தொழில்நுட்பத் திட்டம்.
- ஏற்றுமதியாளர்களுக்கான காப்பீட்டை அதிகரிக்க 'நிர்விக்' திட்டம்.
- ஏற்றுமதியாளர்கள் செலுத்திய வரிகளை இணையவழியில் திரும்பப் பெறுவதற்கான வசதி.
- 2020, ஏப்ரல் முதல் ஜிஎஸ்டி தாக்கல் செய்வதற்கு எளிய வழிமுறை அமல்.

## கட்டமைப்பு மற்றும் போக்குவரத்துத்துறை

- 'உடான்' திட்டத்தின் கீழ் 100 புதிய விமான நிலையங்கள் தொடங்கப்படும்.
- 2023-ஆம் ஆண்டுக்குள் தில்லி-மும்பை விரைவுவழிச் சாலை.

- சென்னை-பெங்களூரு விரைவுவழிச் சாலைக்கான பணிகள் தொடங்கப்படும்.
- முக்கிய சுற்றுலாத் தலங்களுக்கு தேஜஸ் ரயில்கள் இயக்கப்படும்.
- போக்குவரத்துத் துறை கட்டமைப்புகளை மேம்படுத்த ரூ. 1.70 லட்சம் கோடி ஒதுக்கீடு.
- அரசு-தனியார் ஒத்துழைப்பில் 150 பயணிகள் ரயில்கள் இயக்கப்படும்.
- தேசிய சரக்குப் போக்குவரத்து கொள்கை விரைவில் அறிமுகம்.
- தேசிய உள்கட்டமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 103 லட்சம் கோடி மதிப்பிலான திட்டங்கள் தொடங்கப்படும்.
- வீடுகளில் 3 ஆண்டுக்குள் ஸ்மார்ட் மின்சார மீட்டர்கள் பொருத்த நடவடிக்கை.

### நிதித்துறை

- வருமான வரிவிகிதங்கள் குறைப்பு.
- 2020-21 நிதியாண்டுக்கான நிதிப் பற்றாக்குறை இலக்கு 3.5 சதவீதமாக அதிகரிப்பு.
- நடப்பு நிதியாண்டுக்கான நிதிப்பற்றாக்குறை 3.8 சதவீதமாக அதிகரிப்பு.
- ஆதார் எண் அடிப்படையில் நிரந்தரக் கணக்கு எண் (பான்) வழங்கப்படும்.
- வங்கி டெபாசிட்டுக்கான காப்பீட்டுத் தொகை ரூ. 1 லட்சத்திலிருந்து ரூ. 5 லட்சமாக உயர்வு.
- ரூ. 25 கோடி வரை வருமானம் ஈட்டும் 'ஸ்டார்ட்-அப்' நிறுவனங்களுக்கு 100 சதவீதம் வரிவிலக்கு.
- குறைந்த விலை வீட்டுக் கடன்களுக்கான வட்டி வரிச்சலுகை ஓராண்டுக்கு நீட்டிப்பு.

### பெண்கள் மற்றும் குழந்தைகள் நலம்

- பெண்களுக்கான திருமண வயது 18 என்று இருப்பதை அதிகரிக்க சிறப்பு அய்வுக் குழு.
- 6 லட்சம் அங்கன்வாடி பணியாளர்களுக்கு அதிதிறன் கைபேசிகள் வழங்குதல்.
- கருவுற்ற தாய்மார்கள் இறப்பு விகிதத்தைக் குறைக்கும் வழிகளை ஆராய சிறப்புக் குழு.

### கலாச்சாரம் மற்றும் சுற்றுலா

- தமிழகம் (ஆதிச்சநல்லூர்) உள்பட 5 மாநிலங்களில் வரலாற்றுப்புகழ் வாய்ந்த அருங்காட்சியகங்கள்.
- இந்தியப் பாரம்பரியம் மற்றும் பாதுகாப்பு நிறுவனம் உருவாக்கப்படும்.
- நாணயம் சேகரித்தல், வர்த்தகம் தொடர்பான அருங்காட்சியகம் அமைக்கப்படும்.
- ஜார்க்கண்ட் தலைநகர் ராஞ்சியில் பழங்குடியினர் அருங்காட்சியகம் அமைக்கப்படும்.
- குஜராத்தின் லோத்தல் பகுதியில் கடல்சார் அருங்காட்சியகம் அமைக்கப்படும்.

### பெண்கள் மற்றும் குழந்தைகள் சமூக நலம், கலாச்சரம், சுற்றுலா

- நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் 2020-21 பட்ஜெட்டில் மூன்று முக்கிய கருப்பொருட்களை முன் வைத்தார்.
- இதன்படி பெண்கள் மற்றும் குழந்தைகள், சமூக நலன் மற்றும் சுற்றுலா, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றங்களுக்கு அரசு பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்தது.

### மகளிர் மற்றும் சமூக நலத்துறை

- பேட்டி பச்சாவ் பேட்டி பதாவோவின் கீழ் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கையை விட மாணவிகள் சேர்க்கை அதிகமாக உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

| பள்ளிகள் பிரிவு | மாணவர்கள் | மாணவிகள் |
|---|---|---|
| தொடக்க பள்ளி சேர்க்கை | 89.28% | 94.32% |
| இடைநிலை பள்ளி சேர்க்கை | 78% | 81.32% |
| உயர்நிலை பள்ளி சேர்க்கை | 57.54% | 59.7% |

### போஷன் அபியான்

- 0 முதல் 6 வயது வரையிலான குழந்தைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்காக இளம் பருவ பெண்கள் மற்றும் தாய்மார்களுக்கு போஷன் அபியான் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.

### வெளிநாட்டு வாழ் இந்தியர்களும் வரி செலுத்த வேண்டும்

- வெளிநாடுவாழ் இந்தியர்கள், அவர்கள் தங்கியுள்ள நாடுகளில் வரி செலுத்தவில்லையெனில், இந்தியாவில் வரி செலுத்த வேண்டும்.
- வெளிநாடுவாழ் இந்தியராகக் கருதப்படுபவர் 182 நாள்கள் இந்தியாவில் தங்கியிருக்க வேண்டும் என்ற விதிமுறையில் மாற்றம் செய்து பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்த நாள்களின் எண்ணிக்கை தற்போது 120 நாள்களாகக் குறைக்கப்பட்டுள்ளது.
- வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்கள், எந்தவொரு நாட்டிலும் வரி செலுத்தவில்லை என்றால், இந்தியாவில் வரி செலுத்துபவராகக் கருதப்படுவார்.

### வரி செலுத்த வேண்டிய என்.ஆர்.ஐ யார்?

- வெளிநாடு வாழ் இந்தியர்கள் (என்.ஆர்.ஐ.) வருமானவரிசெலுத்த வேண்டும் என்று மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டிருந்தாலும், இந்திய அரசுடன் ஏற்கெனவே செய்துகொண்ட ஒப்பந்தப்படி, மத்திய கிழக்கு நாடுகளில் பணியாற்றும் இந்தியர்களும், வர்த்தக கப்பல்களில் பணியாற்றுவோரும் வருமான வரி செலுத்த தேவையில்லை மத்திய அரசு தெரிவித்துள்ளது.

### விவாத் சே விஸ்வாஸ் என்ற புதிய திட்டம்

- பல்வேறு மேல் முறையீட்டு அமைப்புகளில் நேரடி வரி விதிப்பு தொடர்பாக 4.83 லட்சம் வழக்குகள் நிலுவையில் உள்ளன. இந்த வழக்குகளின் எண்ணிக்கையை குறைக்க 'விவாத் சே விஸ்வாஸ்' என்ற புதிய திட்டம் பட்ஜெட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- ஆதார் மூலம் பான் கார்டை உடனடியாக வழங்கும் புதிய நடைமுறையையும் பட்ஜெட்டில் நிர்மலா சீதாராமன் அறிமுகப்படுத்தியுள்ளார்

### மும்பை-ஆமதாபாத் புல்லட் ரயில் திட்டம்

- புல்லட் ரயில் திட்டத்துக்காக ரூ.5600 கோடியை மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. மகாராஷ்டிரா மாநிலம், மும்பையிலிருந்து குஜராத் மாநிலம் ஆமதாபாத் வரை புல்லட் ரயில் பாதை அமைக்கப்படவுள்ளது.
- நாட்டின் 75வது சுதந்திர தினம் கொண்டாடப்படவுள்ள 2022ஆம் ஆண்டுக்குள் புல்லட் ரயில் திட்டம் செயல்படுத்தபடும் என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

### வருமான வரி சாதகங்களை ஒப்பிட இ-கால்குலேட்டர்

- புதிய மற்றும் முந்தைய வரி முறையில் கிடைக்கக்கூடிய அனு கூலங்களை தெரிந்து கொள்ளும் வகையில் இ-கால்குலேட்டர் வசதியை (வருமான வரித்துறை) மத்திய அரசு அறிமுகம் செய்துள்ளது.
- மத்திய அரசு சமீபத்திய பட்ஜெட்டில் வருமான வரி வரம்பில் மாற்றங்கள் கொண்டு வந்தது. மக்கள் புதிய வரி முறையை பின்பற்றலாம் அல்லது முந்தைய வரி முறையிலேயே தொடரலாம் என்று அறிவித்ததுள்ளது.

### நிறுவனம் தொடங்குவதை எளிமையாக்க மத்திய அரசு புதிய படிவம் அறிமுகம்

- தொழில் தொடங்குவதற்கான நடைமுறையை எளிதாக்கும் நோக்கில் நிறுவன விவகாரங்களுக்கான மத்திய அமைச்சகம் 'ஸ்பைஸ்+' (SPICe +) என்ற விண்ணப்பப் படிவத்தை அறிமுகம் செய்ய உள்ளது.
- நிறுவனம் தொடங்குவது தொடர்பான நடைமுறைகள் அனைத்தும் இந்தப் படிவத்தில் உள்ளடங்கியதாக இருக்கும்.

- இதன் மூலம் காலதாமதம் குறைக்கப்படுவது மட்டுமல்லாமல், நிறுவனப் பதிவுக்கான செலவுகளும் குறையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
- தொழில் செய்வதற்கு ஏற்றநாடுகளின் பட்டியலில் இந்தியா 63-வது இடத்தில் உள்ளது. ஆனால் தொழில் தொடங்குவதற்கான நாடுகள் பட்டியலில் 136-வது இடத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

### கார்பரேட் விவகார அமைச்சகம்
### (Ministry of Corporate Affairs)

- கார்பரேட் விவகார அமைச்சகம், கார்பரேட் நிறுவனங்கள் சட்டம் 1956, 2013 மற்றும் பிற தொடர்புடைய சட்டங்கள் மூலம் இந்தியாவில் உள்ள நிறுவனங்களை கட்டுப்படுத்துகிறது.
- இது சேவைகள் வழிகாட்டுதல் மற்றும் பிற நிறுவனங்கள் தொடர்பான தகவல்களை வழங்குகிறது. முதலீட்டாளர்களும், பங்குதாரர்களுக்கும் பல சேவைகளை வழங்குவதே இதன் முக்கிய நோக்கம்.

### எஸ்பிஐ வங்கி சார்பில் "க்ரீன் மாரத்தான்" போட்டி

- பாரத ஸ்டேட் வங்கி 3-வது எஸ்பிஐ க்ரீன் மாரத்தான் போட்டி நடைபெற்றது.
- புதுப்பிக்கத்தக்க சுற்றுச்சூழலை உருவாக்குவதில் இருக்கும் ஆர்வத்தை ஊக்கப்படுத்தும் வகையிலும் சுற்றுச்சூழல் மீது கொண்ட அக்கறையைக் கொண்டாடும் வகையிலும் இந்த மாரத்தான் போட்டி நடைபெற்றது. இதில், 4,500-க்கும் மேற்பட்ட ஓட்டப் பந்தய வீரர்கள் பங்கேற்றனர்.
- பெசன்ட் நகர் கடற்கரையிலிருந்து பட்டினப்பாக்கம் வரை இந்த மாரத்தான் ஓட்டம் நடைபெற்றது.

### செயில் (SAIL) நிறுவனத்தின் 5% பங்குகளை விற்க மத்திய அரசு திட்டம்

- பொதுத் துறையைச் சேர்ந்த செயில் நிறுவனத்தின் 5 சதவீத பங்குகளை விற்பனை செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
- ஓஎஃப்எஸ் (ஆஃபர் ஃபார் சேல்) வழிமுறை வாயிலாக செயில் நிறுவனத்தின் 5 சதவீத பங்குகளை விற்பனை செய்ய திட்டமிட்டது.
- தற்போதுள்ள விலை அடிப்படையில் செயில் பங்குகளை விற்பதன் மூலமாக மத்திய அரசுக்கு ரூ.1,000 கோடி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### பண இருப்பு விகிதம் 5 ஆண்டுகளுக்கு விலக்கு

- இந்திய ரிசர்வ் வங்கி (ஜனவரி 31 முதல் ஜூலை 31, 2020) சிறு, குறு நிறுவனங்களுக்கான பண இருப்பு விகிதத்தில் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு கடன் விலக்கு அளித்து உள்ளது.

### மீண்டும் ஒரு ரூபாய் நோட்டு புழக்கம் விரைவில் அறிமுகம்

- மத்திய நிதி அமைச்சகம் இந்திய அரசிதழில் Printing of One Rupee Currency Note Rule, 2020 அறிமுகம் செய்துள்ளது.
- இதன் மூலம் இந்திய அரசு ஒரு ரூபாய் நோட்டு அச்சிடப்பட்டு புழக்கத்தில் விடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இது 110 மைக்ரோ மெல்லியத் தன்மை கொண்டது. எடை 90 Gram per Square Meter கொண்டது. இதன் நிறம் பச்சை மற்றும் பிங் நிறம் கொண்டும், இந்நிறம் "நாட்டின் விவசாய ஆதிக்கம்" செலுத்துகிறது என்பதை குறிக்கிறது.
- இதன் வடிவம் சாகர் சம்ரத், இது எண்ணெய் ஆய்வை குறிக்கிறது.

### ஒரு ரூபாய் நோட்

- பிரிட்டிஷ் அரசு கடந்த 1917 நவம்பர் 30 அன்று அறிமுகம் செய்தது. இந்தியாவில் 1861 ஆம் ஆண்டு அறிமுகம் செய்தது. இந்திய அரசு 1949 ஆம் ஆண்டு புதிய வடிவில் வடிவமைத்தது. அதில் இருந்த சிங்கம் உருவம் சாரநாத் தூணில் இருந்து எடுக்கப்பட்டது.

# 4.2 தற்போதைய சமூக பொருளாதார சிக்கல்

**இந்தியாவின் வேலைவாய்ப்பின்மை 6.1%**

- *புள்ளி விவரங்கள் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சரகத்தால் நடத்தப்படும் புதிய தொழிலாளர் கணக்கெடுப்பின் கடந்த 2017-18ஆம் ஆண்டுபடி இந்தியாவில் வேலைவாய்பின்மை 6.1% உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*
- *புள்ளி விவரம் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்*
- *தொடக்கம் – 15 அக்டோபர் 1999*
- *அமைச்சர் – ராவ் இந்திரஜித் சிங்*

# 5. அறிவியல்




## 5.1 அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள்

### கரோனா வைரஸ்க்கு பெயர்

- கரோனா வைரஸுக்கு கொவைட்-19' (COVID-19) என்ற புதிய பெயரை சூட்டியுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்தது.
- "COVID' என்ற இந்தப் பெயரில் "CO' என்பது கரோனா (CORONA) என்ற வார்த்தையையும், "VI" என்பது வைரஸ் என்ற வார்த்தையையும், D என்பது நோய் (DISEASE) என்ற வார்த்தையையும் குறிப்பதாகும்.

### கரோனா வைரஸ் சர்வதேச அவரச நிலை பிரகடனம்

- சீனாவின் ஹூபேய் மாகாணம், வூஹான் நகரில் கரோனா வைரஸ் கடந்த ஆண்டு டிசம்பரில் உருவானது.
- இந்த வைரஸ், ஐரோப்பா, வட அமெரிக்கா, ஆஸ்திரேலியா கண்டங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.
- சுமார் 20 நாடுகளுக்கு இந்த வைரஸ் பரவியுள்ளது.

### சுகாதார அவசர நிலை

- கரோனா வைரஸ் தாக்குதலினால் உயிரிழப்புகள் அதிகரித்து வரும் நிலையில், சர்வதேச சுகாதார அவசர நிலையை உலக சுகாதார அமைப்பு பிரகடனப்படுத்தியுள்ளது.

### ஏ.என்-32 விமானம்

- இந்திய விமானப்படையின் ஏ.என் – 32 விமானப்படை விமானம் பயோஜெட் எரிபொருளைக் கொண்டு முதன்முறையாக இயக்கப்பட்டுள்ளது.
- விமானத்தின் இரு என்ஜின்களும் பயோஜெட் உள்நாட்டு எரிபொருளால் இயக்கப்படுவது இதுவே முதல் முறையாகும். இது லடாக்கில் உள்ள குஷோக்பாகுலா ரிம்போச்சி விமான நிலையிலிருந்து இயக்கப்பட்டது.
- பெங்களூரில் உள்ள விமானசோதனை நிறுவனத்தைச் சேர்ந்த விமானிகள் குழு இந்த சோதனையை நடத்தியது.

### ஸ்பிட்சர் விண்வெளி தொலைநோக்கி பயன்பாட்டில் இருந்து நீக்கம்

- நாசா நிறுவனம் ஸ்பிட்சர் விண்வெளி தொலைநோக்கியின் பயன்பாட்டை முடிவுக்கு கொண்டு வரவுள்ளது. 16 ஆண்டுகளுக்கு மேலாக பேரண்டத்தின் அகச்சிவப்பு கதிர்வீச்சைக் கண்டறிந்து விண்வெளி பற்றிய ஆய்வுக்கு உதவியாக இருந்தது.
- 2003இல் தொடங்கப்பட்ட இந்த தொலைநோக்கி சமீபத்திய ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி செலுத்தப்பட்ட பின்னர் பயன்பாட்டிலிருந்து நீக்க திட்டமிடப்பட்டுள்ளது.
- இந்த விண்வெளி தொலைநோக்கி அண்டவெளியில் உள்ள தொலைதூர விண்மீன் திரள்களை கண்டறிந்தது. சனி கிரகத்தை சுற்றி கண்டறியப்படாத வளையங்களை பற்றி ஆராய்ந்தது.

### அந்தக்பிரஹன்யா 2020 (Antahpragnya 2020)

- தேசிய அளவிலான இந்தியாவின் மிகப்பெரிய கிராமப்புற தொழில்நுட்ப திருவிழா "அந்தக்பிரஹன்யா 2020" தெலங்கானாவில் நடைபெற்றது. ஹைதராபாத்தில் உள்ள கோவில் நகரம் என்று அழைக்கப்படும் பஸாரில் உள்ள ராஜீவ் காந்தி பல்கலைக்கழக அறிவுசார் தொழில்நுட்பத்தில் நடைபெற்றது.
- மூன்று நாட்கள் இந்த திருவிழா நடைபெற்றது. இதன் மையக்கருத்து 'Sport and Encourage Rural Tech Innovators' என்பதாகும்.

### நான்கு இந்திய விமானிகளுக்கு ரஷ்யாவில் பயிற்சி

- இந்தியாவின் முதல் மனிதனை விண்வெளிக்கு அனுப்பும் திட்டமான ககன்யானுக்கு (2022) திட்டத்துக்காக நான்கு இந்திய விமானிகளுக்கு ரஷ்யாவில் உள்ள Gagarin Research and Test Cosmonaut Training Centre–ல் பயிற்சி வழங்கப்படுகிறது.
- இந்த பயிற்சி ஓராண்டு வழங்கப்பட உள்ளது. இந்த பயிற்சிக்காகன வீரர்கள் இந்திய விமானப் படையில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்ய "Supercam" ரோபோ

- அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாஸா செவ்வாய் (Mars 2020) கிரகத்தை ஆய்வு செய்ய லேசர் ரோபோவான 'Supercam' ஐ அனுப்ப உள்ளது. இது செவ்வாய் கிரகத்தில் சுமார் 20 அடி (7 மீட்டர்) தொலைவில் கனிமவியல் மற்றும் வேதியியல் பற்றி ஆய்வு மேற்கொள்ளவுள்ளது.
- மேலும் புதைபடிவ நுண்சத்துகள், கனிமங்கள் பற்றி அறிந்து கொள்ளவும் இது உதவும். இந்த ரோபோவை வரும் ஜுலை 17 முதல் ஆகஸ்ட் 5க்கு இடைப்பட்ட காலத்தில் வின்னில் செலுத்த உள்ளது. 2021ஆம் ஆண்டு செவ்வாய் கிரகத்தை சென்றடையும்.

### நீயூரோடிஜெனரேடிவ் நோயைக் குணப்படுத்த மருந்து கண்டுபிடிப்பு

- ஹைதராபாத்தில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் 'AIM-4' என்ற மருந்தை கண்டுபிடித்துள்ளனர். இது "லூ கெஹ்ரிக் நோய்" என அழைக்கப்படும் "அமியோட் ரோபிக் லேட்டரல் ஸ்க்லரோசிஸ்" எனப்படும் அரிய நரம்பியல் கடத்தல் நோய்க்கு மருந்து கண்டறிந்து உள்ளனர்.

### அண்டவெளியில் புதிய XMM-2599 விண்மீன் கண்டுபிடிப்பு

- அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தலைமையிலான சர்வதேச வானியலாளர்கள் குழு XMM-2599 என்று அழைக்கப்படும் புதிய விண்மீனை கண்டறிந்து உள்ளனர். இது 1.8 பில்லியன் ஆண்டுக்கு முன்பு உருவாகியது என்று தெரிவித்தனர்.

# 5.2 சுகாதார அறிவியல் பற்றிய சமீபத்திய கண்டுபிடிப்புகள்

### உலகின் முதல் மிட்ரல் வால்வு சிகிச்சை அறிமுகம்

- அபோட் டெண்டின் டிரான்ஸ்கேட்டர் மிட்ரல் வால்வுஅமைப்பு நிறுவனம் உலகின் முதல் இதயத்தின் மிட்ரல் வால்வுக்கான மறுசிகிச்சை முறைக்கு ஐரோப்பிய நாடுகள் ஒப்புதல் வழங்கி உள்ளது. இதய வால்வு பிரச்சனைகளுக்கான உலகின் முதல் புதிய மாற்று சிகிச்சை முறையாகும்.

### ஆர்சனிக் அமித்திற்கு எதிரான புதிய அரிசி வகை கண்டுபிடிப்பு

- மேற்கு வங்காள மாநிலத்தில் நிலத்தடி நீரில் அதிகப்படியான ஆர்சனிக் செறிவு ஏழு மாவட்டத்தின் 83 ஒன்றியங்களில் காணப்படுகிறது.
- இந்த நிலப்பகுதிகளில் நெல் விளைவிக்கப்படும் போது நிலத்தடி நீர் மூலம் ஆர்சனிக் நெல்களில் கலந்து விடுகிறது.
- இந்த அரிசிகளை நாம் உட்கொள்ளும் போதும் நீர் அருந்தும் போதும் தோல் புண்கள், சுவாசக் கோளாறு, புற்றுநோய் ஏற்படுகிறது. இதற்கு மாற்றாக சின் சுராக்கில் உள்ள அரிசி ஆராய்ச்சி நிலையம், மேற்கு வங்க வேளாண்மைத்துறை, தேசிய தாவரவியல் நிறுவனம் இணைந்து குறைந்த ஆர்சனிக் எதிப்பு தன்மை கொண்ட அரிசி வகை IET 21845 உருவாக்கி உள்ளனர்.
- உலக சுகாதார அறிக்கைபடி ஆர்சனிக் உணவு, நீர் மூலம் உட்கொள்வதால் அது மெதுவாக விஷமாக மாறும் என்றும், இதன் மூலம் தோல் காயம், தோல் புற்றுநோய் ஏற்படும் என்று தெரிவித்துள்ளது.

# 5.2 ஊடகம் மற்றும் தொலைத்தொடர்பு

### போக்குவரத்து விதிமீறல்கள் மீது நடவடிக்கை எடுக்க ““செல்போன் செயலி”

- “போக்குவரத்து விதிகளை மீறுவோர் மீது எளிதாக நடவடிக்கை எடுக்க, தமிழகத்தில் முதல்முறையாக தென்காசி மாவட்ட காவல் துறையினருக்காக *'tenkasi district traffic police'* என்றசெல்போன் செயலி உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்த செயலியில் போட்டோ, 10 விநாடிகள் வரைவீடியோ எடுக்கும் வசதி, ஜிபிஆர்எஸ் வசதி ஆகியவை உள்ளன. விதிமீறல்களில் ஈடுபடுவோர் எந்த இடத்தில், எந்த நாளில், எந்த நேரத்தில் விதிமீறலில் ஈடுபட்டனர் என்பதை போட்டோ, வீடியோ மூலம் ஆதாரத்துடன் நிரூபிக்க முடியும்.

# 6 தினசரி தேசிய நிகழ்வு



### 12வது தெற்காசிய மாநாடு

- 12வது தெற்காசிய மாநாடு டெல்லியில் உள்ள பாதுகாப்பு ஆய்வுகள் மற்றும் பகுப்பாய்வு நிறுவனத்தில், பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தொடங்கி வைத்தார். வளர்ச்சிக்கான பொருளாதார ஒத்துழைப்பு, விவாதங்கள் விவாதிக்கப்பட்டன.
- அதன் மையக்கருத்து: "Neighbourhood First" Policy: Regional Perceptions.
- சார்க் அமைப்பு

| | |
|---|---|
| **தற்போதைய தலைவர்** | நேபாளம் |
| **தொடக்கம்** | 8 டிசம்பர் 1985 |
| **தலைமையகம்** | காத்மண்டு, நேபாளம் |

### சுரஜ்குந்த் கைவினை திருவிழா

- ஹரியானா மாநிலம் பாரிதாபாத் நகரில் 34-வது சுரஜ்குந்த் சர்வதேச கைவினை திருவிழாவினை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தொடங்கி வைத்தார். இமாச்சலப் பிரதேச மாநிலம் இந்த ஆண்டின் மையக்கருத்திற்கான மாநிலமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- இத்திருவிழாவில் பல்வேறு நாட்டின் கைவினை பொருட்கள், பாரம்பரிய கலைகள் இதில் காட்சிப்படுத்தப்பட்டு உள்ளது.

#### சுரஜ்குந்த் சர்வதேச கைவினை திருவிழா

- சுரஜ்குந்த் சர்வதேச கைவினை திருவிழா முதன்முறையாக 1987 ஆம் ஆண்டு நடைபெற்றது.
- இதில் கைவினை பொருட்கள், கலாச்சாரம் காட்சிப்படுத்தப்படும். சுரஜ்குந்த் மேளா ஆணையம் ஹரியானா சுற்றுலாத்துறை, மத்திய சுற்றுலாத்துறை இணைந்து ஏற்பாடு செய்தது.

### சிக்னலில் "ஹாரன்" அடித்தால் காத்திருப்பு நேரம் அதிகரிப்பு

- சாலை சிக்னல்களில் சிகப்பு விளக்கு எரியும்போது 'ஹாரன்' அடித்தால், வாகன ஓட்டிகள் கூடுதல் நேரம் காத்திருக்க வேண்டிய சூழல் மும்பையில் ஏற்பட்டுள்ளது.
- 2019-ம் ஆண்டில் போக்குவரத்து நெரிசல் மிக்க நகரங்களில் உலக அளவில் 4-வது இடத்தில் மும்பை உள்ளதாக சர்வதேச ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. கடந்த ஆண்டு இந்தப் பட்டியலில் மும்பை முதலிடத்தில் இருந்திருக்கிறது.

#### அதிகரிக்கும் ஒலிமாசு

- வாகன நெரிசலால் மும்பையில் காற்று மாசு அதிகரித்துள்ளது. டெல்லிக்கு அடுத்தப்படியாக மும்பையில்தான் காற்று மாசு அதிக அளவில் உள்ளது.

### நாட்டின் 3-வது தனியார் ரயில்

- இந்தூர்-வாராணசி இடையே இயக்கப்படவுள்ளதாக ரயில்வே அறிவித்துள்ளது.
- அடுத்த 5 ஆண்டுகளில் 100 வழித்தடங்களில் 150 தனியார் ரயில்களை இயக்குவதாக ரயில்வே அமைச்சகம் அறிவித்திருந்தது.
- இந்த திட்டத்தின் ஒரு பகுதியாக நாட்டின் முதல் தனியார் ரயில் தில்லி-லக்னோ இடையே இயக்கப்பட்டது.

- இரண்டாவது தனியார் ரயில், ஆமதாபாத்-மும்பை வழித்தடத்தில் இயக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 3-ஆவது தனியார் ரயிலை இயக்க ரயில்வே முடிவு செய்துள்ளது.

### ஹூப்பள்ளி-தார்வாட் விரைவு பேருந்து பாதை (Hubballi-Dharwad Bus Rapid Corridor)

- ஹூப்பள்ளி-தார்வாட் விரைவு பேருந்து பாதையை துணை குடியரசுத் தலைவர் வெங்கய்யா நாயுடு தொடங்கி வைத்தார். ஹூப்பள்ளி-தார்வாட் திட்டம் கர்நாடக மாநிலத்தின் கடந்த ஒரு ஆண்டுக்கு மேலாக நடைபெற்ற திட்டமாகும். இதற்காக உலக வங்கி 33% நிதி உதவி வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கான மொத்தம் செலவு ரூ.970.87 கோடி ஆகும். 100 குளிரூட்ட பேருந்துகளும், மேலும் 55 மின்சார பேருந்துகள் இயக்கப்பட உள்ளது.

### மெய்நிகர் காவல் நிலையம்

- ஒடிசா மாநில அரசு சமீபத்தில் மெய்நிகர் காவல் நிலையத்தை துவங்கி உள்ளது. மக்கள் தங்கள் புகார்களை நேரில் வந்து தராமல் இணையதளம் மூலமே தங்கள் புகார்களை பதிவு செய்யலாம்.
- இந்த மெய்நிகர் காவல் நிலையம் (e-Police Station) மாநில குற்ற பதிவியில் பணியகத்தின் கீழ் இயங்க உள்ளது. ஒடிசா மாநிலத்தின் குற்ற பதிவுகள் பணியகம் புவனேஷ்வர் நகரில் அமைந்துள்ளது.

### உலகின் மூன்றாவது மிக்பெரிய பேருந்து தயாரிப்பாளர்

- ஹிந்துஜா குழு உலகளவில் உள்ள நடுத்தர மற்றும் கனரக வணிக பேருந்துகளை உற்பத்தி செய்கிற நிறுவனங்களை பட்டியலிட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டில் அசோக்லேலாண்ட் நிறுவனம் 23,100 பேருந்துகளை உற்பத்தி செய்துள்ளது.
- இதன் மூலம் அசோக்லேலாண்ட் நிறுவனம் உலகின் மூன்றாவது மிகப்பெரிய பேருந்து உற்பத்தி நிறுவனம் ஆகும்.

### அறிவியல் மற்றும் தொழில்நுட்ப உள்கட்டமைப்புகளை வலுப்படுத்த SATHI திட்டம் தொடக்கம்

- அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் உள்ள அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இந்தியாவில் உள்ள அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளின் உள்கட்டமைப்புகளை வலுப்படுத்த "Sophisticated Analytical & Technical Help Institutes (SATHI)" என்ற திட்டம் தொடங்கி உள்ளது.
- இத்திட்டம் மூலம் நாட்டில் உள்ள கல்வி நிறுவனங்கள், ஆராய்ச்சி ஆய்வகங்கள், உற்பத்தி தொழில் துறைகள் ஆகியவற்றில் உயர்ந்த தரம் கொண்ட ஆய்வக வசதிகளை வழங்க உள்ளது.
- அடுத்த நான்கு ஆண்டுகளில் ஐந்து SATHI மையங்கள், அமைக்க திட்டமிடப்பட்டு உள்ளது.
- இதற்கு முன் மூன்று பல்கலைக்கழகங்களில் இந்த மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. அவை ஐஐடி கரக்பூர், ஐஐடி டெல்லி மற்றும் பனராஸ் இந்து பல்கலைக்கழகம் ஆகும்.

### ஆந்திர மாநிலத்தின் 'Intivadhakey Pension' திட்டம்

- வீட்டிற்கே வந்து (Door step) ஓய்வூதியம் வழங்கும் திட்டமான 'Intivadhakey Pension' பிப்ரவரி 1 அன்று ஆந்திரபிரதேசம் மாநில அரசு தொடங்கி உள்ளது. இது போன்ற ஓய்வூதிய திட்டம் இந்தியாவிலேயே முதன் முறையாக ஆந்திராவில் தொடங்கப்பட்டுள்ளது.
- பிப்ரவரி 1 அன்று 13 மாவட்டங்களில் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டம் தொடங்கப்பட்ட சில நாட்களிலேயே 60 லட்சம் ஓய்வூதியக்காரர்களில் 94 சதவீதம் பேர் இணைந்துள்ளதாக ஆந்திர பிரதேச மாநில அரசு தெரிவித்துள்ளது.

### ஜனசேலகா திட்டம் தொடக்கம்

- ஜனசேவகா திட்டம் கர்நாடகா மாநிலத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அரசு சேவைகளான ரேஷன் கார்டு, மூத்த குடிமக்களுக்கான அடையாளம் அட்டை மற்றும் சுகாதார அட்டை ஆகியவற்றை வீட்டின் வாசல் வரை (Door step) கொண்டு வந்து கொடுப்பதற்கான இந்த திட்டத்தை அறிமுகம் செய்தது.

### "மொகல்" தோட்டம்

- தில்லி குடியரசுத் தலைவர் மாளிகையில் உள்ள "மொகல் தோட்டம்', பிப்ரவரி 5-ம் தேதி பொதுமக்கள் பார்வைக்குத் திறக்கப்படவுள்ளது.
- மொகல் தோட்டத்தை பொதுமக்கள் பார்வையிடும் வருடாந்திர "உத்யனோத்சவ்' நிகழ்வை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் செவ்வாய்க்கிழமை தொடங்கி வைத்தார். அதைத் தொடர்ந்து, புதன்கிழமை (பிப்ரவரி 5) முதல் மொகல் கார்டனைக் காண பொதுமக்கள் அனுமதிக்கப்பட உள்ளனர்.

### நாட்டின் மிகப்பெரிய தோட்டக்கலை கண்காட்சி தொடக்கம்

- நாட்டின் மிகப்பெரிய "தேசிய தோட்டக்கலை கண்காட்சி 2020" பெங்களூரில் நடைபெற்றது. நாட்டின் பல்வேறு மாநிலங்களில் இருந்து 50,000 விவசாயிகள் கலந்து கொண்டனர். இதன் மையக்கருத்து 'Making Farming an Enterprise' என்பதாகும்.
- விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவதை நோக்கமாக கொண்டு தொழில் செயல்முறைகளில் கண்காட்சியில் கவனம் செலுத்தப்பட்டது.
- இந்த திட்டம் கடந்த 2005ஆம் ஆண்டு முதன் முறையாக சிறு, குறு மற்றும் நடுத்தர மற்றும் தோல் அமைச்சகத்தால் தொடங்கப்பட்டது.
- இதன் முக்கிய நோக்கம் நிலையான மேம்பாடு, வேலைவாய்ப்பு மற்றும் பாரம்பரிய கிராமப்புற தொழில்களுக்கான நிர்வாக அமைப்புகளை வலுப்படுத்துதல்.
- இக்கண்காட்சியை இந்திய விவசாய ஆராய்ச்சி கவுன்சில் ஏற்பாடு செய்தது.

### ராமர் கோயில் அறக்கட்டளை அமைப்பு

- அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவதற்கு ஸ்ரீ ராம ஜென்மபூமி தீரத்த க்ஷேத்ரா என்ற பெயரில் அறக்கட்டளை அமைக்கப்பட்டுள்ளதாக, பிரதமர் நரேந்திர மோடி மக்களவையில் தெரிவித்தார்.

#### அறக்கட்டளையில் 15 உறுப்பினர்கள்

- ராமர் கோயில் அறக்கட்டளையில் 15 உறுப்பினர்கள் இடம்பெறுவர் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்தார்.
- இதுதவிர ஹிந்து மதத்தைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்களை, பெரும்பான்மை தீர்மானத்தின் மூலம் அறங்காவலர்கள் வாரியம் நியமிக்கும், மற்றொரு உறுப்பினரை, மத்திய அரசு நியமிக்கும் அவர், மத்திய அரசின் இணைச் செயலருக்கு குறையாத அந்தஸ்தில் உள்ள ஐஏஎஸ் அதிகாரியாக இருப்பார்.

### 8வது இரைப்பை உணவுக்குழாய் புற்றுநோய் மாநாடு

- 8வது இரைப்பை உணவுக்குழாய் புற்றுநோய் மாநாடு
- 8வது ஆசியா – பசிபிக் இரைப்பை உணவுக்குழாய் புற்றுநோய் மாநாடு சென்னையில் நடைபெற்றது. இந்த மூன்று நாள் மாநாட்டை இந்தியா முதன் முறையாக நடத்தியது. எசோ இந்தியா 2020 மற்றும் ஏபிஜிசிசி 2020 மற்றும் ஸ்ரீ ராமசந்திரா நிறுவனம் இணைந்து நடத்தியுள்ளனர். மொத்தம் 14 நாடுகள் இதில் கலந்து கொண்டனர்.

### இந்தியாவின் முதல் கண்ணாடி பாலம்

- இந்தியாவின் முதல் கண்ணாடி பாலம் உத்திரபிரதேச மாநிலத்தில் திறந்து வைக்கப்பட்டது. கங்கா ஆற்றின் ரிஷிகேஷில் திறந்து வைக்கப்பட்டது. கடந்த ஆண்டு பாதுகாப்பு காரணமாக லக்ஸ்மன் ஜீலா பாலம் மூடப்பட்டது. தற்போது மறுசீரமைப்பு செய்யப்பட்டு திறக்கப்பட்டுள்ளது.
- இந்த கண்ணாடி பாலம் 3.5 இன்சஸ் மெல்லிய வடிவமைப்பை கொண்டது. இது 750 கி.கி. எடையை தாங்கும் தன்மை கொண்டது. 132.3 மீட்டர் நீளமும், 7 அடி உயரமும் கொண்டது. இப்பாலம் 150 ஆண்டுகள் பாதுகாப்பாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### “ஜல் சக்தி துறை”

- ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் பொது சுகாதார பொறியியல் மற்றும் நீர்ப்பாசனம் மற்றும் வெள்ளம் கட்டுப்பாடு துறையை “ஜல் சக்தி துறை“ என்று பெயர் மாற்றம் செய்துள்ளது.
- நிர்வாக கவுன்சில் அலுவலர்களின் சந்திப்பில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது. மேலும் ஜல் ஜீவன் திட்டத்தின் படி குழாய் மூலம் குடிநீர் வழங்கும் திட்டத்தை டிசம்பர் 2021ஆம் ஆண்டிற்குள் 100 சதவீதம் மேற்கொள்ள உள்ளது.
- முதல் கட்டமாக 7 மாவட்டங்கள்-பூன்ஞ், ரியாசி, சம்பா, ஸ்ரீநகர், கந்தேர்பால், சோபியான் மற்றும் புல்வாமா ஆகியவற்றில் 100 குழாய் மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் ஜுன் 2020 தொடங்கப்பட உள்ளது.
- இரண்டாவது கட்டமாக 7-க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் வரும் ஜுன் 2021 மற்றும் 6 மாவட்டங்களில் டிசம்பர் 2021ல் தொடங்கப்பட உள்ளது.
- இதன் முக்கிய நோக்கம் கிராமப்புறங்கள் பள்ளிகள், அங்கன்வாடி, சுகாதார மையம் ஆகியவற்றுக்கு குழாய் மூலம் குடிநீர் வழங்கும் திட்டமாகும்.

### சர்வேதச கடல் உணவு கண்காட்சி

- 22வது சர்வதேச கடல் உணவு கண்காட்சி கேரளா மாநிலம் கொச்சியில் நடைபெற்றது. இக்கண்காட்சி மூன்று நாட்கள் நடைபெற்றது. மத்திய வணிக அமைச்சகம் இக்கண்காட்சிக்கு ஏற்பாடு செய்தது.
- இதன் மையக்கருத்து “Blue Revolution- Beyond Production to Value Addition” என்பதாகும்.

### பழங்குடியின இளையோர் பரிமாற்ற திட்ட முகாம்

- மத்திய அரசின் நேரு யுவகேந்திர அமைப்பின் சார்பில் சென்னையில் 12-ஆவது பழங்குடியான இளையோர் பரிமாற்ற திட்ட முகாம் நடைபெற்றது.
- உலகின் கணிசமான அளவு இளைஞர்களைப் பெற்றுள்ள நாடுகளில் குறிப்பிடத்தக்க நாடாக இந்தியா விளங்குகிறது.
- இந்திய மக்கள் தொகையில் ஏறத்தாழ 50 சதவீதத்துக்கும் மேலாக 25 வயதுக்குள்பட்ட, இளைஞர்கள் நிரம்பி உள்ளனர்.
- முதல் முகாம் – 2006 ஆம் ஆண்டு நடைபெற்றது.

### பிடார் விமான நிலையம் (Bidar airport)

- கர்நாடக மாநில முதலமைச்சர் பி.எஸ். எடியுரப்பா நீண்டநாள் நிலுவையில் இருந்த பிடார் விமான நிலையத்தை மக்கள் பயன்பாட்டுக்கு தொடங்கி வைத்தார். இந்த பிடார் விமான நிலையம் சிதிரி என்ற இடத்திற்கு வெளியே உள்ளது.
- இந்த நிகழ்ச்சியில் மக்களவை மற்றும் இதர உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### கிராமங்களின் வரைப்படங்களை தயாரிக்க டிரோன்களை பயன்படுத்திய மாநிலம்

- மத்திய பிரதேச மாநில அரசு கிராமங்களின் வரைப்படங்களை உருவாக்க டிரோன்களை பயன்படுத்தியது. இவ்வாறு டிரோன்களை கொண்டு வரைபடங்கள் உருவாக்கிய முதல் மாநிலம் மத்திய பிரதேசம் ஆகும்.

- இது தொடர்பாக, மாநில வருவாய் துறை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் கணக்கெடுப்பு இந்தியா (Survey of India) உடன் ஒரு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் வரைப்படம் தயாரிக்க 55 ஆயிரம் கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டன.

### ஐ.ஐ.எம் பெங்களூரு உலகளாவிய சிறந்த பள்ளிகள் பட்டியலில் மூன்றாவது இடம்

- உலகளாவிய மிகப்பெரிய இணையவழி கல்வி வழங்குவதில் பெங்களூருவில் உள்ள இந்திய மேலாண்மை நிறுவனம் 2020ஆம் ஆண்டிற்கான சிறந்த வணிக பள்ளிகள் பட்டியலில் உலகளவில் மூன்றாவது இடத்தை பெற்றுள்ளது.
- மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சகம் அறிமுகம் செய்த ஸ்வயம் (SWAYAM – Study webs of Active Learning for young aspiring Minds) இணையதளத்தில் சிறப்பான இணையவழி கல்விகளை இந்நிறுவனம் வழங்கி வருகிறது.

### நாட்டின் இரண்டாவது மிகப்பெரிய மெட்ரோ திட்டம்

- ஹைதராபாத்தில் இரண்டாவது மெட்ரோ ரயில் பாதையை தெலுங்கானா முதல்வர் சந்திரசேகர் ராவ் திறந்து வைத்தார். 11 கி.மீ. கொண்ட இந்த மெட்ரோ ரயில் பாதை செகந்தரபாத்தில் உள்ள ஜுபிலி பேருந்து நிலையத்தில் இருந்து ஹைதராபாத்தில் உள்ள மகாத்மா காந்தி பேருந்து நிலையம் வரை அமைக்கப்பட்டுள்ளது.
- டெல்லி மெட்ரோவுக்கு (231 கி.மீ) அடுத்தபடியாக நாட்டின் இரண்டாவது நீளமான மெட்ரோ பாதை என்ற பெருமையை ஹைதராபாத் (69.2 கி.மீ) பெற்று உள்ளது.

### முதலமைச்சர் பரிவர் சம்ரிதி யோஜனா

- ஹரியானா மாநில முதலமைச்சர் மனோகர் லால் முதலமைச்சர் பரிவார் சம்ரிதி யோஜனா என்ற திட்டத்தை தொடங்கி வைத்தார். இதன் மூலம் 5 ஏக்கர்க்கு குறைவான நிலம் கொண்டுள்ளவர்களுக்கும் மற்றும் ஆண்டு வருமானம் ரூ.1.80 லட்சத்திற்கு குறைவாக கொண்ட விவசாயிகளுக்கும் நிதி உதவியாக இத்திட்டத்தின் மூலம் ஆண்டுதோறும் ரூ.6000 வழங்கப்பட உள்ளது.

### போடோ ஒப்பந்த கொண்டாட்டம்

- அசாம் மாநிலத்தில் வசிக்கும் போடோ பழங்குடியின மக்களின் உரிமைகள் மற்றும் போடோலாந்து என்ற தனி மாநில கோரிக்கையை வலியுறுத்தி போடோலாந்து தேசிய ஜனநாயக முன்னணி (என்டிஎப்பி) என்ற அமைப்பு நீண்டகாலமாக ஆயுதம் ஏந்தி போராட்டம் நடத்தி வந்தது.
- சமீபத்தில் அந்த அமைப்புடன் மத்திய அரசு நடத்திய பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டது. அதன்படி மத்திய அரசு, அசாம் மாநில அரசு மற்றும் என்டிஎப்பி இடையே முத்தரப்பு ஒப்பந்தம் ஜனவரி 27-ம் தேதி கையெழுத்திடப்பட்டது.
- அதன்படி, போடோ பழங்குடியின மக்களுக்கு மாநில பிரிவினையின்றி அரசியல் கட்டமைப்புக்கு உட்பட்டு அரசியல், பொருளாதார உரிமைகள் வழங்கப்பட உள்ளன.

### நக்ஷத்ரா மாநாடு (Nakshtras 2020)

- தமிழ்மொழி, கலாச்சாரமற்றும் தொல்பொருள் அமைச்சர் ம.பா.பாண்டியராஜன் நக்ஷத்ரா 2020 மாநாட்டை தொடங்கி வைத்தார். பள்ளி மற்றும் கல்லூரிகளில் 3.2 லட்சம் மரக்கன்றுகளை நட்டதற்காக நடிகர் விவேக் அவர்களுக்கு “பசுமை நாயகன் விருது“ வழங்கப்பட்டது.

### போலி மருத்துவ விளம்பரங்கள்

- போலி மருத்துவ விளம்பரங்களை வெளியிடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கும் வகையில் மத்திய அரசு சட்ட திருத்த வரைவை உருவாக்கியுள்ளது.
- சிவப்பு நிறத் தோல், முடிவளர்ச்சி, பாலியல் குறைபாடுகளுக்கான தீர்வுகள், சிசுவின் பாலினத்தை மாற்றுதல் போன்றவை தொடர்பாக அலோபதி, ஆயுஷ் (ஆயுர்வேதம், யுனானி, சித்தா) ஆகிய மருத்துவ முறைகளில்
- தற்போது நடைமுறையில் இருக்கும் மருந்துகள் மற்றும் உடனடி மருத்துவத் தீர்வுகள் தொடர்பான விளம்பரங்கள் சட்டம் 1954-ல் திருத்தம் கொண்டு வரும் வகையில் இந்த சட்ட வரைவு உருவாக்கப்பட்டுள்ளது.
- நடைமுறையில் இருக்கும் சட்டத்தின்படி 54 விதமான நோய்கள் மற்றும் உடல்குறைபாடுகள் தொடர்பான விளம்பரங்கள் தடை செய்யப்பட்டுள்ளன.
- இந்தப் புதிய சட்ட திருத்த வரைவு அந்த எண்ணிக்கையை 78-ஆக உயர்த்தி உள்ளது.

### மலைப்பகுதிகளுக்கு ஹெலிகாப்டர் சேவை

- மத்திய அரசின் உதான் திட்டத்தின் கீழ் உத்தரகாண்டின் கவுச்சர், சின்யாலிசவுர் பகுதிகளில் ஹெலிபேட் அமைக்கப்பட்டது.
- இதைத் தொடர்ந்து அந்த நகரங்களுக்கு ஹெலிகாப்டர் சேவையை தொடங்க உத்தரகாண்ட் அரசு முடிவு செய்தது. அதன்படி இந்த சேவையை முதல்வர் திரிவேந்திர சிங் ராவத் தொடங்கி வைத்தார்.

### தேசிய மின் ஆளுமை திட்டம்

- 23வது தேசிய மின் ஆளுமை மாநாடு மும்பையில் நடைபெற்றது. இதன் முக்கிய நோக்கம் அரசுத்துறைகளை டிஜிட்டல் தொழில்நுட்பங்களுக்கு மாற்றுதல் ஆகும். இந்த மாநாட்டில் மும்பை பிரகடனம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள தேசிய மின் ஆளுமை சேவைகளை இந்த மாநாட்டில் மதிப்பீடு செய்யப்பட்டது.
- டிஜிட்டல் தொழில்நுட்பத்திற்காக மாற்றங்கள் பிரிவின் கீழ் (Re-Engineering for Digital Transformation) தேசிய சுகாதார ஆணையம் மற்றும் ஆயுஷ்மான் பாரத் திட்டம் ஆகியவற்றுக்கு தங்க விருது வழங்கப்பட்டது

### ஆந்திரத்தில் முதல் "திஷா" காவல் நிலையம்

- பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்ற வழக்குகளை விசாரிப்பதற்காக, ஆந்திர மாநிலத்தில் உள்ள ராஜமகேந்திரவரத்தில் (ராஜமுந்திரி) 'திஷா' காவல் நிலையத்தை அந்த மாநில முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி திறந்து வைத்தார்.
- பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்ற வழக்குகளை விரைந்து விசாரிப்பதற்காக 'திஷா' சட்டத்தை ஆந்திர அரசு இயற்றியது. இதன் மூலம், குற்றவாளிகளுக்கு 21 நாள்களுக்குள் மரண தண்டனை கிடைக்க வழிவகை செய்யப்படும்.

### நாடு முழுவதும் சிறப்பாக செயல்படும் 20 ஸ்மார்ட் நகரங்கள் பட்டியலில் வாரணாசி

- கடந்த 2015-ம் ஆண்டு அழகிய நகரம் (ஸ்மார்ட் சிட்டி) திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கிவைத்தார்.
- நகர்ப்புறங்களில் உலகத் தரத்துக்கு இணையாக அனைத்து அடிப்படை வசதிகளை உருவாக்குவது இந்த திட்டத்தின் நோக்கம்.
- இதற்காக நாடு முழுவதும் உள்ள 100 நகரங்கள் தேர்வு செய்யப்பட்டன.
- இதில் முதல் 20 நகரங்களில் பிரதமர் நரேந்திர மோடியின் தொகுதியான வாரணாசியும் இடம்பெற்றுள்ளது.
- இதுபோல திட்டத்தை அமல்படுத்துவதில் பின்தங்கிய நிலையில் உள்ள 20 நகரங்கள் பட்டியலும் வெளியிடப்பட்டுள்ளன.

| தரநிலை | நகரங்கள் |
|---|---|
| 1 | அகமதாபாத் |
| 2 | நாக்பூர் |
| 3 | திருப்பூர் |
| 4 | ராஞ்சி |
| 5 | போபால் |
| 6 | சூரத் |
| 7 | கான்பூர் |
| 8 | இந்தூர் |
| 9 | விசாகப்பட்டினம் |
| 10 | வேலூர் |
| 11 | வடோதரா |
| 12 | நாசிக் |
| 13 | ஆக்ரா |
| 14 | வாரணாசி |
| 15 | தாவணகரே |
| 16 | கோட்டா |
| 17 | புனே |
| 18 | உதய்பூர் |
| 19 | டேராடூன் |
| 20 | அமராவதி |

### சாக்ஷம் விழிப்புணர்வு

- இந்தியன் ஆயில் நிறுவனம் சார்பில் எரிவாயு, எண்ணெய் சிக்கனம் மற்றும் பாதுகாப்பான முறையில் சமையல் குறித்து “சாக்ஷம்“ என்ற தலைப்பில் ஆண்டுதோறும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இந்த ஆண்டு ஜனவரி 16-ஆம் தேதி தொடங்கி பிப்ரவரி 15-ஆம் தேதி வரை ஒரு மாதம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.
- இதைத் தொடர்ந்து எரிபொருளை வீணடிக்காமல் சுற்றுச்சூழலைக் காப்போம் என்ற தலைப்பில் அடுப்பில்லாத சமையல் போட்டி நடைபெற்றது.

### இந்திய-மத்திய ஆசிய வர்த்தக கவுன்சில்

- மத்திய ஆசியா வர்த்தக சபை புதுடெல்லியில் நடைபெற்றது. இதற்கு இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை கூட்டமைப்பு ஏற்பாடு செய்தது .
- மத்திய ஆசியா நாடுகளில் இருந்து கஜகஸ்தான், உஸ்பெகிஸ்தான், துர்க்மெனிஸ்தான் மற்றும் தஜிகிஸ்தான் ஆகிய ஐந்து நாடுகள் கலந்து கொண்டது.

### வடகிழக்கு-வங்கதேசம் இடையே 2021-க்குள் ரயில் பாதை

- இந்தியாவின் வடகிழக்குப் பகுதிக்கும், வங்கதேசத்துக்கும் இடையே அடுத்த ஆண்டுக்குள் ரயில் பாதை இணைப்பு ஏற்படுத்தப்படும் என்று மத்திய அரசின் வடகிழக்குப் பிராந்திய மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.
- திரிபுராவிலுள்ள அகர்தலாவுக்கும், வங்கதேசத்தின் அகௌராவுக்கும் இடையே ரயில் பாதை அமைக்கும் பணிகள் அடுத்த ஆண்டு இறுதிக்குள் நிறைவடைந்துவிடும்.
- இரு நகரங்களுக்கும் இடையே 2022-ஆம் ஆண்டில் ரயில் போக்குவரத்து தொடங்கும். இந்தியாவின் 75-ஆவது சுதந்திர தினத்தின்போது அந்த இரு நகரங்களுக்கும் இடையே ரயில் போக்குவரத்து தொடங்கப்படும்.

### இடம்பெயர்ந்த உயிரினங்களுக்கான பாதுகாப்பு மாநாடு

- ஐ.நா. சபையின் இடம்பெயர்ந்த உயிரினங்களுக்கான பாதுகாப்பு மாநாட்டின் 13வது பதிப்பு பிப்ரவரி 17 முதல் 22 வரை இந்தியாவில் நடத்தப்பட்டது. இந்த மாநாட்டை இந்தியா சார்பாக சுற்றுச்சூழல் வன மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் நடத்தியது.
- இதன் மையக்கருத்து *Migratory Species Connect the Planet and we Welcom them* என்பதாகும்.

- அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு இந்த அமைப்பிற்கு இந்திய தலைமையேற்க உள்ளது. 130 நாடுகள் இந்த மாநாட்டில் பங்கேற்க உள்ளது.

### “வாசிப்பு திட்டம்”

- ஹரியானா மாநில அரசு மாணர்வகளிடம் புத்தகங்கள் வாசிப்பு திறனை மேம்படுத்த “வாசிப்பு திட்டம் – Reading Mission’ அறிமுகம் செய்துள்ளது.
- மத்திய அரசின் வாசிப்பு திட்டம் – 2022“-ஐ அடிப்படையாக கொண்டு இந்த திட்டத்தை ஹரியானா மாநில அரசு துவங்கி உள்ளது.

### சட்டீஸ்கர் மாநிலத்தின் புதிய மூன்று மாவட்டங்கள் உருவாக்கம்

- சட்டீஸ்கர் மாநில முதலமைச்சர் பூபேஷ் பகஹல் (Bhupesh Baghel) 3 புதிய மாவட்டங்கள் ‘Gaurela, Pendra, Marwahi’ ஆகியவை உருவாக்கப்பட்டுள்ளதாக அறிவித்தார். இதன் மூலம் மாநிலத்தின் மொத்த மாவட்டங்களின் எண்ணிக்கை 28 என அறிவித்தார்.
- இந்த மூன்று புதிய மாவட்டங்கள் 166 கிராம பஞ்சாயத்துகள், 222 கிராமங்கள் 1,68,225 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட இரண்டு நகர பஞ்சாயத்துகள் உள்ளடக்கியது.

### கர்நாடகத்தில் மேலும் சில சமுதாயங்கள் பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பு

- கர்நாடகத்தில் உள்ள சில சமுதாயங்களை பழங்குடியினர் பட்டியலின் கீழ் கொண்டு வருவதற்கான மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.
- கர்நாடகத்தில் உள்ள பரிவாரா மற்றும் தல்வாரா பழங்குடியின சமுதாயத்தினருக்கு இட ஒதுக்கீடு மற்றும் அரசால் வழங்கப்படக் கூடிய இதர பலன்கள் கிடைக்கப்பெறுவதை உறுதி செய்யும் வகையில் இந்த மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது.
- உத்தர கன்னட மாவட்டம் தவிர்த்து பெலகாவி மற்றும் தார்வாட் பகுதிகளில் வாழும் சித்தி சமுதாயத்தினருக்கும் பழங்குடியின அந்தஸ்து வழங்கப்படுகிறது.

### ஒரே பாரதம் உன்னத பாரதம் முகாம்

- ஏக் பாரத் ஷெர்ஷா பாரத் முகாம் பிப்ரவரி 10 முதல் பிப்ரவரி 28 வரை நடைபெறுகிறது. இந்த முகாம் தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- ஏக் பாரத் ஷெர்ஷா பாரதத்தின் நோக்கம் நமது தேசத்தின் பன்முகத்தன்மையில் ஒற்றுமையைக் கொண்டாடுவது மற்றும் தேசிய ஒருங்கிணைப்பின் உணர்வை ஊக்குவித்தல் என்பதாகும்.
- இக்காலகட்டத்தில் மொழி, இலக்கியம், உணவு வகைகள், திருவிழாக்கள், கலாச்சார நிகழ்வு, சுற்றுலா ஆகிய துறைகளில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதல் ஆகும்.

### CLIMFISHCON-2020

- காலநிலை மாற்றம் மற்றும் பெருங்கடல் ஆரோக்கியம் பற்றிய சர்வதேச மாநாடு (LIMFISHLON-2020) கேரளா மாநிலத்தில் நடைபெற்றது. கேரளாவில் உள்ள லீ மெரிடியன் மாநாடு மையத்தில் நடைபெறுகிறது. கேரள மாநிலத்தின் மீன்வளத்துறை மற்றும் கொச்சின் சமூக மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் இணைந்து நடத்துகிறது.
- இதன் மையக்கருத்து Climate Change – Effective Adaptation for a Secure Future என்பதாகும்.

### இந்தியாவில் மிகப்பெரிய காற்று தர கண்காணிப்பு வலை அமைப்பு

- மகாராஷ்டிரா மாநிலம் மும்பையில் 90 இடங்களில் காற்று தர கண்காணிப்பு வலை அமைப்பு (Air Quality Monitoring Network) அமைக்க உள்ளது. இதுவே இந்தியாவின் மிகப்பெரிய வலை அமைப்பு ஆகும். அடுத்த ஐந்து ஆண்டுகளில் இந்த திட்டம் முடிவடைய உள்ளது. தற்போது மும்பையில் 30 காற்று தர கண்காணிப்பு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. டெல்லியில் 38 காற்று தர கண்காணிப்பு வலை அமைப்பு பயன்பாட்டில் உள்ளது

### பாகூர், காரைக்கால் சிறப்பு வேளாண்மண்டலமாக அறிப்பு

- *பாகூர், காரைக்கால் சிறப்பு வேளாண் மண்டலமாக அறிவிப்பு*
- *புதுவை மாநிலத்தில் உள்ள பாகூர் பகுதியையும், காரைக்கால் மாவட்டத்தையும் சிறப்பு வேளாண் மண்டலமாக அறிவித்து புதுவை சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*
- *புதுவையின் நெல் களஞ்சியமாக பாகூர் திகழ்கிறது. புதுவையின் வோளாண் மண்டலமாக காரைக்கால் மாவட்டம் திகழ்கிறது.*

### தேசிய நீர் மாநாடு: போபால்

- *மத்திய பிரதேச முதலமைச்சர் கமல்நாம் மாநில தலைநகர் போபாலில் தேசிய நீர் மாநாட்டை துவங்கி வைத்தார்.*
- *இந்த மாநாட்டில் மாநிலத்திற்கான தண்ணீர் உரிமை சட்டம் மூலம் அனைத்து மக்களுக்கமான தண்ணீர் உரிமை (Right to Water) பூர்த்தி செய்வது குறித்தும், இந்த சட்டத்தின் இறுதி வடிவம் குறித்தும் விவாதிக்கப்பட்டது.*

### அனைவருக்கும் ஊட்டச்சத்து கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும்

- *டெல்லியில் உள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனத்தின் 58-வது பட்டமளிப்பு விழா நடைபெற்றது.*
- *இதில் உலகளாவிய பட்டினி மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு குறியீட்டில் இந்தியா 102-வது இடத்தில் உள்ளதாக துணை குடியரசுத் தலைவர் வெங்கய்யா நாயுடு தெரிவித்தார்.*
- *நாட்டின் மொத்த உணவு தானிய உற்பத்தி 283.37 மில்லியன் டன்னாக உள்ளது.*

### “ஸ்ரீராமாயாணா எக்பிரஸ்”

- *இந்திய இரயில்வேத்துறை இராமாயணம் பற்றிய புராணக்கதைகள் அடங்கிய, பாடல்கள் அடங்கிய புதிய ஸ்ரீராமாயணா எக்ஸ்பிரஸ் அறிமுகம் செய்துள்ளது.*

# 7 சர்வதேச நிகழ்வு



### ஐரோப்பிய யூனியனில் இருந்து வெளியேறியது பிரிட்டன்

- ஐரோப்பிய யூனியனில் உறுப்பு நாடாக இருந்து வந்த பிரிட்டன் அதிலிருந்து வெளியேறியது.
- ”ஐரோப்பிய யூனியனில்” பிரிட்டன் பிரான்ஸ், ஜெர்மனி, போலந்த். ஸ்வீடன், ஸ்பெயின் உட்பட 28 நாடுகள் இடம் பெற்றிருந்தன.
- இந்த விவகாரம் தொடர்பாக பிரிட்டனில் கடந்த 2016ம் அண்டு பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட்டது.
- ஐரோப்பிய யூனியனில் இருந்து வெளியேற வேண்டும் என 50 சதவீதத்துக்கும் மேற்பட்டோர் வாக்களித்தனர்.
- இதையடுத்து, அந்த அமைப்பில் இருந்து வெளியேறுவதற்கான நடவடிக்கையில் பிரிட்டன் இறங்கியது. இது ”பிரெக்ஸிட்“ என பொதுவாக அழைக்கப்பட்டது.

### காமன்வெல்த் அமைப்பில் மாலத்தீவு மீண்டும் இணைப்பு

- காமன்வெல்த் அமைப்பிலிருந்து விலகிய மாலத்தீவு, அந்த அமைப்பில் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளது.
- இங்கிலாந்தின் காலனியாதிக்கத்தில் இருந்த நாடுகளின் கூட்டமைப்பான காமன்வெல்த்தில், மாலத்தீவு 47 ஆண்டுகளாக அங்கம் வகித்து வந்தது.
- அந்த அமைப்பிலிருந்து மாலத்தீவு கடந்த 2016-ஆம் ஆண்டு விலகியது.
- இந்த நிலையில், யாமீனுக்குப் பிறகு கடந்த 2018-ஆம் ஆண்டு அதிபராகப் பொறுப்பேற்ற இப்ராஹிம் முகமது சோலீயின் கோரிக்கையை ஏற்று, காமன்வெல்த் அமைப்பில் மாலத்தீவு மீண்டும் சேர்க்கப்பட்டது.

### ரஷ்யாவிலிருந்து கச்சா எண்ணெய் இந்தியாவுக்கு இறக்குமதி

- மத்திய பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் இந்தியாவுக்கு கச்சா எண்ணெய் இறக்குமதி செய்ய ரஷ்யாவுடன் (ரஷ்யாவின் மிகப்பெரிய எண்ணெய் உற்பத்தி நிறுவனம்) முதல்முறையாக ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் இந்திய எண்ணெய் நிறுவனம் (IOCL) 2 மில்லியன் மெட்ரிக் டன் யூரல்ஸ் தர கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யவுள்ளது.

### ஃபோர்டு நிறுவனத்தில் தொழில் நுட்ப புதுமை மையம்

- சென்னையில் ஃபோர்டு வாகன தயாரிப்பு நிறுவனத்தின் தொழில்நுட்ப புதுமை மையத்தை முதல்வர் எடப்பாடி கே. பழனிசாமி திறந்து வைத்தார்.
- இந்த மையமானது சுமார் 1.5 லட்சம் சதுர அடிப் பரப்பில் ரூ.700 கோடி முதலீட்டில் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா தலைமையில் நடந்த முதல் உலக முதலீட்டாளர் மாநாட்டின் போது மேற்கொள்ளப்பட்டது. அதனடிப்படையில், ஃபோர்டு நிறுவனம் சார்பில் தொழில் நுட்ப புதுமை மையம் அமைக்கப்பட்டுள்ளது.

### TiE Women

- சென்னையில் உள்ள இந்துஸ் தொழில் முனைவு (Indus Entrepreneurs) அமைப்பு பெண்களை தொழில்முனைவர்களாக ஊக்குவிக்க TiE Women என்ற முயற்சியை அறிமுகம் செய்துள்ளது.

- இந்நிறுவனம், கல்வி, வழிகாட்டாளர், *(Mentoring)* தொழில்துறை, முதலீட்டாளர்கள் என்ற அடிப்படையில் உலகளவில் பெண்கள் தொழில் முனைவோர்களை உருவாக்க *'TiE Women'* தொடங்கப்பட்டுள்ளது.

### ஜெரூசலேம்-மும்பை திருவிழா

- ஜெரூசலேம் – மும்பை நகரங்களுக்கு இடையேயான சிறப்பு வரலாற்று தொடர்புடைய காட்சிகளை காண்பிக்க முதல் முறையாக ஜெரூசலேம் மும்பை விழா பிப்ரவரி 15 ல் மும்பையில் நடைபெற உள்ளது. மும்பை மற்றும் ஜெரூசலேம் நகரங்களுக்கு இடையேயான சிறப்பான தொடர்புகள் இங்கு காட்சிப்படுத்த உள்ளது.
- மும்பையில் உள்ள இந்திய - இஸ்ரேல் வர்த்தக சபை மற்றும் இஸ்ரேலின் துணை தூதகரத்துடன் இணைந்து இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### சபர்மதி ஆசிரமம் அமெரிக்க அதிபர் டிரம்ப்

- இந்தியாவுக்கு வரும் 24-ஆம் தேதி வருகை தரும் அமெரிக்க அதிபர் டிரம்ப், குஜராத் மாநிலம் ஆமதாபாதில் உள்ள சபர்மதி ஆசிரமத்துக்கு வருகை தர உள்ளார்.
- ஒரு லட்சம் பார்வையாளர்கள் அமரும் நிர்மாணிக்கப்பட்டுள்ள உலகின் மிகப்பெரிய சர்தார் வல்லபாய் படேல் கிரிக்கெட் மைதானத்தை திறந்துவைக்க உள்ளார்.
- மொடெரா பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள சர்தார் வல்லபாய் படேல் கிரிக்கெட் மைதானத்தை பிரதமர் மோடியுடன் இணைந்து அதிபர் டிரம்ப் திறந்து வைக்கிறார். பின்னர் அந்த மைதானத்தில் பிரதமர் மோடியுடன் ஒரே மேடையில் உரையாற்றவுள்ளார்.
- இந்த நிகழ்ச்சி கடந்தாண்டு அமெரிக்காவில் உள்ள ஹுஸ்டன் நகரில் 50,000 அமெரிக்கவாழ் இந்தியர்கள் கலந்துகொண்ட "மோடி நலமா" (ஹௌடி மோடி) நிகழ்ச்சியை ஒத்திருக்கும்.

### வேளாண் மேம்பாட்டிற்கான சர்வதேச நிதியத்தின் 43வது ஆளுமை மாநாடு

- இத்தாலியில் உள்ள ரோம் நகரில் வேளாண் மேம்பாட்டிற்கான சர்வதேச நிதியத்தின் 43வது ஆளுமை மாநாடு சமீபத்தில் நடைபெற்றது.
- இந்த மாநாட்டின் மையக்கருத்து : *"Investing in sustainable food systems to end hunger by 2030".*

#### <u>சர்வதேச வேளாண் மேம்பாட்டு நிதியம்</u>

- தலைமையிடம் – ரோம், இத்தாலி
- வருடம் – 1917

# 8 தமிழ்நாடு



### சுற்றுலா துறையில் தமிழ்நாடு முதன்மை மாநிலம்

- *2019-20 ஆம் ஆண்டு பொருளாதார கணக்கெடுப்பின்படி தமிழ்நாடு மாநிலம் சுற்றுலா துறையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயணிகளை ஈர்ப்பதில் முதல் இடத்தில் உள்ளது.*
- *தமிழ்நாடுக்கு அடுத்தப்படியாக கேரளா மற்றும் ஆந்திரபிதேசம் மாநிலங்களில் உள்நாடு மற்றும் வெளிநாடு பயணிகள் 65% டெல்லி மற்றும் ராஜஸ்தான் மாநிலங்கள் 67% சுற்றுலா பயணிகள் பார்வையிட்டனர்.*

### மின்-சுற்றுலா விசா

- *கடந்த 2014 ஆம் ஆண்டு மின்-சுற்றுலா விசா அறிமுகம்படுத்தப்பட்டது. இந்த ஏற்பாடு 12 நாடுகளில் மட்டுமே நடைமுறையில் உள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு பின் 2016ஆம் ஆண்டு e-visa என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இதன் கீழ் ஐந்து துணை பிரிவுகள் அறிமுகம் செய்யப்பட்டது.*
- *அவைகள்: சுற்றுலா விசா, மின்-தொழில்கள் விசா, மின்-மருத்துவ விசா, மின்-மருத்துவ உதவியாளர் விசா, மின்-மாநாடு விசா*

### இந்திய சமூகத்தின்  நரம்பியல் மாநாடு

- *இந்திய சமூக மன்றத்தின் 21-வது நரம்பியல் சிகிச்சை மாநாடு சென்னையில் நடைபெற்றது. 20 சர்வதேச நாடுகளில் இருந்து 300 மருத்துவர்கள் கலந்து கொண்டனர்.*

### தென்னிந்தியாவின் மிகப்பெரிய கல்வி கண்காட்சி 2020

- *தென்னிந்தியாவின் மிகப்பெரிய சர்வதேச கல்வி கண்காட்சியின் 17-வது பதிப்பு 'தி இந்து' குழுமம் சார்பில் சென்னையில் தொடங்கியது.*
- *இதில் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற பல்வேறு நாடுகளில் இருந்து மாணவர்கள் கலந்து கொள்கின்றனர்.*
-

### கோவையில் ஏவுகணைகள் ஒருங்கிணைப்பு தொழிற்சாலை

- *இந்தியாவின் பன்னாட்டு பொறியியல் குழும நிறுவனம், தனியார் துறைப் பாதுகாப்பு தளவாட நிறுவனமான லார்சன் அண்டு டுப்ரோ (எல்அண்ட் டி) ஏவுகணைத் தொழில் நுட்பங்களில் முன்னணி வகிக்கும் எம்பிடிஏ நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையிலான கூட்டு நிறுவனம் சார்பில் கோவையில் ஏவுகணை ஒருங்கிணைப்பு தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது.*
- *உள்நாட்டு மற்றும் உலகளாவிய சந்தைகளைக் கருத்தில் கொண்டு, எல்.டி.எம்.எம்.எஸ். எல் நிறுவனம், ஏவுகணை உபகரண ஒருங்கிணைப்பு, வெடிப்பொருள் இல்லாத ஏவுகணை ஒருங்கிணைப்பு, ஏவுகணை துணை தொழில் நுட்பங்கள், ஏவுகணை ஆயுதம் செலுத்தல் அமைப்புகளுக்கான சோதனை வசதியை கோவையில் உள்ள சிறப்பு பொருளாதார மண்டலத்தில் அமைத்துள்ளது.*

- இந்தமையத்தில் இந்திய ஆயுதப்படைகளுக்கு மேம்பட்ட ஏவுகணைகள், ஏவுகணை தளவாடங்களை வழங்குவதற்காக செயல்பட்டு வருகின்றது.

**கோவையில்"க்யூ-ஆர்" கோடுகளுடன் குடை**

- புற்றுநோய் விழிப்புணர்வு தகவல்களை அளிக்கும் க்யூ-ஆர் கோடுகளுடன் கூடிய குடை இந்தியாவிலேயே முதல்முறையாக கோவையில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- சர்வதேச புற்றுநோய் தினத்தையொட்டி (பிப்ரவரி 4) கோவையில் உள்ள ஸ்ரீராமகிருஷ்ணா புற்றுநோய் ஆராய்ச்சி மையம் சார்பில் இக்குடை அறிமுகம் செய்யப்பட்டது.
- மாநகராட்சி ஆணையர் ஷ்ரவன் குமார் ஜடாவத் குடையை வெளியிட்டதுடன், "ஹெல்ப் கேன்சர்" என்ற இணையதள சேவையை அறிமுகம் செய்து வைத்தார்.

**விருதுநகர் மாவட்டத்தில் இறந்தவர்களின் ஆதார் எண் சேகரிப்பு**

- நாட்டில் முதல்முறையாக விருதுநகர் மாவட்டத்தில் கடந்த 8 ஆண்டுகளில் உயிரிழந்தவர்களின் ஆதார் எண்களை சேகரிக்கும் பணி தொடங்கியுள்ளது என இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தின் (ஆதார்) துணை இயக்குநர் ஆர்.சந்தான கோபாலன் தெரிவித்தார்.
- இந்தியாவில் உயிரிழந்தவர்களின் ஆதார் அட்டை சேகரிக்கும் பணிகள் முதல் முறையாக விருதுநகர் மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

**கடலூரில் ரூ.50 ஆயிரம் கோடியில் பெட்ரோலிய சுத்தகரிப்பு ஆலை**

- கடலூரில் ரூ.50 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் பெட்ரோலிய சுத்திகரிப்பு ஆலை நிறுவுவது தொடர்பாக முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி தலைமையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

- தமிழகத்துக்கு தொழில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில், அமெரிக்கா, துபை உள்ளிட்ட நாடுகளுடன் 41 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

**தலைவாசல் சர்வதேச கால்நடை**

- சேலம் மாவட்டம், தலைவாசல் பகுதியில் சர்வதேசத் தரத்தில் ஒருங்கிணைந்த கால்நடை ஆராய்ச்சி பூங்கா மற்றும் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க அடிக்கல் நாட்டு விழா மற்றும் விவசாய பெரு விழா (பிப்ரவரி 9) நடைபெற்றது.
- சுமார் 1,100 ஏக்கர் பரப்பளவில் ரூ.1,023 கோடி மதிப்பில் அமையும் ஒருங்கிணைந்த கால்நடை ஆராய்ச்சி பூங்கா - கால்நடை மருத்துவக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டினார்.
- கால்நடைகண்காட்சியை தொடங்கிவைத்தார்.

**புதிய கால்நடைத் தீவன தொழிற்சாலை**

- திருச்சி, சேலம், திருவண்ணாமலை மாவட்டங்களில் மேலும் 3 புதிய கால்நடை தீவனத் தொழிற்சாலைகள் அமைக்கப்படும் என முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி அறிவித்தார்.

**கால்நடை ஆராய்ச்சி பூங்காவின் சிறப்பம்சங்கள்**

- இதில் கால்நடை உயர் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடைப்பண்ணைப் பிரிவில் நாட்டு இன மற்றும் கலப்பின கறவைப் பசு பண்ணைகள், செம்மறி மற்றும் வெள்ளாட்டுப் பண்ணைகள், வெண் பன்றிப் பண்ணை, நாட்டுக் கோழிப் பண்ணை மற்றும் நாட்டின நாய்களின் இனப்பெருக்கப் பிரிவு உள்ளிட்டவை அமைக்கப்படுகின்றன.

**பெண்கள் நல சர்வதேச மருத்துவக் கருத்தரங்கு**

- பெண்கள் நலனுக்கான சர்வதேச மருத்துவக் கருத்தரங்கு சென்னையில் நடைபெற்றது.
- இந்நிகழ்வில், இலங்கை, வங்கதேசம், பூடான், ஃபிஜி தீவுகள் உள்பட 12 நாடுகளை சேர்ந்த மருத்துவ நிபுணர்களும், பிரதிநிதிகளும் அதில் கலந்து கொண்டனர்.

### 130 நகராட்சிகள் திறந்தவெளி கழிப்பிட மற்ற இடங்களாக அறிவிப்பு

- *15 மாநகராட்சியில் 12 நகராட்சி மற்றும் 136 நகர உள்ளாட்சியில் 130 நகர உள்ளாட்சி திறந்தவெளி கழிப்பிடமற்ற இடமாக மாறி உள்ளதாக மாநில அரசு உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.*
- *மனித கழிவுகளை மனிதர்கள் அகற்றும் தடை சட்டம் 2013 படி வழக்குகள் தொடங்கப்பட்டது. இந்த வழக்கை ஐந்து நீதிபதிகள் அமர்வு விசாரித்தது.*
- *ஸ்வச் பாரத் திட்டத்தின் கீழ் 13, 772 வீடுகளுக்கு சுகாதாரமான குடிநீர் வழங்குவதாக நகராட்சி குடிநீர் விநியோக நிர்வாகம் தெரிவித்துள்ளது.*

### 11 மாநகராட்சிகளில் “மாபெரும் சாலைகள்“ திட்டம்

- *சென்னை உள்பட 11 மாநகராட்சிகளில் நடந்தும் சைக்கிள்களிலும் மக்கள் சிரமமின்றி செல்லும் வகையில் ‘மாபெரும் சாலைகள்’ திட்டம் செயல்படுத்தப்படும் என உள்ளாட்சித் துறை அமைச்சர் எஸ். பி.வேலுமணி தெரிவித்தார்.*
- *பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில் ‘மாபெரும் சாலைகள்’ திட்டத்தின் தொடக்க விழா நடைபெற்றது.*

### மனிதக் கழிவில் இருந்து இயற்கை உரம் தயாரிக்கும் திட்டம்

- *நீலகிரி மாவட்டம், கேத்தியில் உள்ள வளம் மீட்புப் பூங்கா சர்வதேசப் பயிற்சி மையமாக மாறியுள்ளது.*
- *நீலகிரி மாவட்டம், அருவங்காட்டில் இயங்கிவரும் கிராமிய அபிவிருத்தி இயக்கம் சார்பில் கடந்த 2010-ஆம் ஆண்டில் தனிநபர் கழிவறை கட்டும் திட்டம், நீலகிரியில் தொடங்கப்பட்டது.*
- *இதைத் தொடர்ந்து நாட்டிலேயே முதல் முறையாக கேத்தி பேரூராட்சியில் மனிதக் கழிவுகளில் இருந்து உரம் தயாரிக்கப்பட்டு விவசாயத்துக்குப் பயன்படுத்தப்படுகிறது.*
- *நிதி ஆயோக் அமைப்பு, கேத்தியில் செயல்படுத்தப்படும் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்டங்களை ஆய்வு செய்து பாராட்டியுள்ளது.*

### பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம்

- *பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்துக்கு சட்டப்பூர்வ அங்கீகாரம் அளிக்கும் வகையில் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இதற்கான அறிவிப்பு நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்டு, அதற்கான சட்ட மசோதா நடப்பு சட்டப் பேரவைக் கூட்டத் தொடரிலேயே தாக்கல் செய்யப்பட்டு சட்டமாக்கப்பட்டது.*
- *தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் உள்ளிட்ட காவிரி டெல்டா மாவட்டங்களை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பைத் தொடர்ந்து, காவிரி டெல்டா மாவட்டங்களை வேளாண் மண்டலமாக்கும் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன.*
- *பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் என்பதை உறுதிப்படுத்த தனிச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. அதன்படி, ‘தமிழ்நாடு சிறப்பு வேளாண்மை மண்டல பாதுகாப்புச் சட்டம் 2020’ (TAMILNADU SPECIAL AGRICULTURE ZONE PROTECTION ACT -2020) என்ற பெயரில் சட்டம் இயற்றப்பட்டது.*

### ஆசியாவிலேயே அதிக முதலீடுகளை ஈர்க்கும் தமிழகம்

- *காஞ்சிபுரம் அருகே கண்ணன்தாங்களில் நடைபெற்ற விழாவில் சியட் நிறுவன கார் டயர்கள் உற்பத்தித் தொழிற்சாலையைத் தொடங்கி வைத்தார் முதல்வர் எடப்பாடி பழனிசாமி.*
- *இந்தியாவிலேயே டயர்கள் உற்பத்தியில் தமிழகம் முதன்மை மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது.*

- ஆசியாவிலேயே அதிக முதலீடுகளை ஈர்க்கும் சக்தியாக தமிழகம் உள்ளதாக தமிழக முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி தெரிவித்தார்.

## 21,966 ஏக்கரில் பொன்னேரி தொழில் முனைய மேம்பாட்டுத் திட்டம்

- சென்னை - பெங்களூர் தொழில் வழித்தடத் திட்டத்தின் கீழ், திருவள்ளூர் மாவட்டத்தில் 21,966 ஏக்கர் பரப்பளவில் பொன்னேரி தொழில்முனைய மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.
- இந்தத் திட்டத்துக்கான மாநில அரசின் ஆதரவு வழங்கும் ஒப்பந்தத்துக்கும், பங்குதாரர்களின் ஒப்பந்தத்துக்கும் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.
- கிழக்கு கடற்கரை பொருளாதாரப் பெருவழிச்சாலை திட்டத்தின் இரண்டாம் கட்டமாக, சென்னை- கன்னியாகுமரி தொழில் வழித்தடத் திட்டம் ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் என்று தமிழக பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டது.
- சென்னையில் பொது நிதி நிலை ஆராய்ச்சி மையம்
- சிக்கலான பொருளாதாரச் சூழ்நிலையிலும் அரசின் நிதி நிலைமையைப் பராமரிப்பதற்காக, பொருளியலில் தனித்துவம் பெற்ற நிறுவனத்திடமிருந்து உயர்தரமான கொள்கை ஆலோசனைகளைப் பெறுவது பெரிதும் பயனளிக்கும்.
- எனவே, சென்னை கோட்டூர்புரத்தில் அமைந்துள்ள சென்னை பொருளியல் கல்வி நிறுவனம், அதன் வளாகத்துக்கு அருகே ஒரு பொது நிதிநிலை ஆராய்ச்சி மையம் அரசு அமைக்க உள்ளது.

# தமிழக பட்ஜெட் 2020-21




### 8 மாவட்டங்களில் வேளாண் பதப்படுத்தும் மண்டலங்கள்

- வரும் நிதியாண்டில் (2020-21) பிரதமரின் விவசாயிகள் நிதியுதவித் திட்டத்தின் கீழ் ரூ.218 கோடி செலவில் தேனி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, சேலம், கடலூர், விழுப்புரம், மற்றும் மதுரை மாவட்டங்களில் மேலும் 8 வேளாண் பதப்படுத்தும் மண்டலங்கள் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் அறிவித்தார்.

### கடல்நீர் சுத்தகரிப்பு நிலையங்கள்

- ராமநாதபுரம், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் ரூ.3,041 கோடியில் தினமும் 60 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட இரண்டு கடல்நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

### ரூ.1,020 கோடியில் சேலத்தில் கால்நடை ஆராய்ச்சி நிலையம்

- கால்நடை பராமரிப்புத் துறையை மேலும் வலுப்படுத்தும் விதமாக சேலம் மாவட்டம் தலைவாசலில் கால்நடை அறிவியலில் ஒருங்கிணைந்த ஆராய்ச்சிக்கான மேம்பட்ட நிலையத்துக்கு அடிக்கல்லை முதல்வர் நாட்டியுள்ளார்.
- இக்கல்வி நிலையமும், கால்நடை பூங்காவுக்கான இதர வசதிகளும், மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்களின் நிதி ஆதாரங்களிலிருந்தும் நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் ரூ.1,020 கோடி செலவில் உருவாக்கப்படும் என்றார்.

### "சென்னை மாநகரக் கூட்டாண்மை" வளர்ச்சி திட்டம்

- சென்னை மாநகரம் நிலையான பொருளாதார வளர்ச்சி பெறுவதை உறுதி செய்யும் வகையில், "சென்னை மாநகரக் கூட்டாண்மை" என்னும் தனித்தன்மை வாய்ந்த வளர்ச்சி திட்டம் செயல்படுத்தப்படும்.

### கிராமத் தன்னிறைவு வளர்ச்சசித் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்

- முதல்வரின் கிராமத் தன்னிறைவு வளர்ச்சித் திட்டம் என்ற புதிய ஐந்தாண்டு தன்னிறைவுத் திட்டத்தை அரசு அறிமுகப்படுத்த உள்ளது.
- குடிநீர் வழங்கல், சுகாதாரம், கல்வி, உணவுப் பாதுகாப்பு, இடுகாடுகள், தெரு விளக்குகள், வீட்டு வசதி, வாழ்வாதாரம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்றவற்றில் குக்கிராம அளவில் தன்னிறைவு அடைவதற்கு இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்றார்.

### பழங்குடியினருக்கும் குடியிருப்புகள் ஏற்படுத்த தமிழக அரசு சிறப்புத்திட்டம்

- முதல்வரின் பசுமை வீடுகள் திட்ட நிதியின் கீழ் 2020-2021-ஆம் ஆண்டில் வீடுகள் தேவைப்படும் அனைத்து 8, 803 குடும்பங்களுக்கு தலா ரூ.3 லட்சம் செலவில் வீடுகள் கட்டித் தரப்படும்.
- பழங்குழயின மக்களுக்கு சிறந்த உள் கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய குடியிருப்புகளை ஏற்படுத்த ஒரு சிறப்புத் திட்டத்தை அரசு செயல்படுத்தவுள்ளது.

**கீழடி அகழ் வைப்பகம்**

- கீழடி அகழ்வராய்ச்சியில் கிடைக்கப்பெற்ற பொருகள்களைக் காட்சிப்படுத்துவதற்காக உலகத் தரம் வாய்ந்த ஒரு புதிய அகழ் வைப்பகம் அமைத்திட ரூ.12.21 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சாலைப்பாதுகாப்புக்கு தனிப்பிரிவு**

- நெடுஞ்சாலைத்துறையில் சாலைப் பாதுகாப்பு என்று தனிப் பிரிவு ஏற்படுத்தப்படும் என்று நிதியமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.
- சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிகளில் சாலைப் பாதுகாப்பு பிரிவுகள் ஏற்படுத்தப்படும்.

**முக்கிய அம்சங்கள்**

- 2020-21ஆம் நிதியாண்டில் ரூ.11 ஆயிரம் கோடி பயிர்க் கடன்கள்ப வழங்க இலக்கு.
- மின்னணு குடும்ப அட்டை வைத்திருப்போர் எங்கும் பொருள் வாங்கலாம்.
- நெல்லை மாவட்டம் கங்கை கொண்டானில் மெகா உணவுப் பூங்கா அமைக்க ஒப்புதல்.
- 5 புதிய மாவட்டங்களுக்கு ரூ.550 கோடியில் புதிய கட்டடங்கள்.
- சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களுக்கு ரூ.4,315.21 கோடி நிதி.
- ஆட்சேபனை புறம்போக்கு நிலங்களில் வசிப்போருக்கு மாற்று வீட்டுமனை.
- அம்மா விபத்து-ஆயுள் காப்பீட்டுத் திட்டத்துக்கு ரூ.250 கோடி நிதி.
- பேரிடர் மேலாண்மைக்காக ரூ.1,360.11 கோடி நிதி ஒதுக்கீடு.
- காவல் துறையில் 10.276 பேர் புதிதாக நியமனம்.
- புதிதாக தமிழ்நாடு சாலைப் பாதுகாப்பு இயக்கம் உருவாக்கப்படும்.
- சென்னை, மதுரை, கோவையில் சாலை பாதுகாப்புப் பிரிவுகள்.
- விபத்துகளில் சிக்கி இறப்போர் குடும்பத்துக்கான நிதி ரூ.4 லட்சமாக உயர்வு.
- வேளாண் தொழில்நுட்ப ஆலோசனை பெற, உழவர் – அலுவலர் தொடர்புத் திட்டம் உருவாக்கப்படும்.
- தோட்டக்கலை பயிர் சாகுபடிப் பரப்பை அதிகரிக்க 325 மெட்ரிக் டன் காய்கறி விதைகள் அளிக்கப்படும்.
- விழுப்புரம், செங்கல்பட்டு, நாகையில் மீன்பிடித் துறைமுகங்கள்.
- தமிழ்நாடு பாசன விவசாய நவீனமயமாக்கல் திட்டம் ரூ.2,962 கோடியில் செயல்படுத்தப்படும்.
- வரும் நிதியாண்டில் பொருளாதார வளர்ச்சி 7.27% என மதிப்பிடப்பட்டுள்ளது.
- ஒருங்கிணைந்த சாலை கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்துக்கு ரூ.5,500 கோடி நிதி.
- மகளிர் நலத் திட்டங்களுக்கு ரூ.78,796.12 கோடி நிதி ஒதுக்கீடு.
- அண்ணாமலைப் பல்கலை மருத்துவக் கல்லூரியை அரசே ஏற்று நடத்தும்.
- 1.12 லட்சம் வீடுகளுக்கான கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படும்.